
# ஸ்ரீ ஆசார்யன்






ஞானப்பிரானும் (உத்ஸவர்) பூதத்தாழ்வாரும்

# கீதாசார்யன்-13

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन ।"

தொகுதி 2 | ஸித்தார்த்தி௵ | ஐப்பசி மீ | அக் 79 | பகுதி 1




ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M.A.

P. T சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்

7, தெற்குமாடவீதி,
திருவல்லிக்கேணி : : சென்னை-600 005

ஆண்டுச் சந்தா ரு. 10

விலை ரு. 1-00

# ஸ்ரீமத் பகவத் கீதை

அர்ஜுந உவாச

அர்ச்சுனன் சொல்கிறான்

**த்ருஷ்ட்வேமம் ஸ்வஜநம் க்ருஷ்ண யுயுத்ஸும்**
**ஸமுபஸ்த்திதம் 28**

**ஸீதந்தி மம காத்ராணி முகம்ச பரிசுஷ்யதி**
**வேபதுச்ச சரீரேமே ரோமஹர்ஷச்ச ஜாயதே 29**

கண்ணா! போர்புரிய விரும்பி முன்னே நிற்கும் இவ்வுறவினர்களைக் கண்டு என்னுடைய கை கால்கள் மெலிகின்றன. முகம் வாடுகிறது. உடல் நடுங்குகிறது. மயிர்க்கூச்செறிகின்றது.

**காண்டீவம் ஸ்ரம்ஸதே ஹஸ்தாத் த்வக்சைவ பரிதஹ்யதே**
**நச சக்நோம் யவஸ்த்தாதும் ப்ரமதீவச மேமந: 20**

என் கையிலிருந்து காண்டீபம் எனும் வில் நழுவுகின்றது. என் உடல் (தோலும்) எரிகின்றது. நிலையாக நிற்பதற்கும் முடியவில்லை என் மனமும் சுழல்கின்றது.

**நிமித்தாநிச பச்யாமி விபரீதாநி கேசவ**
**நச ச்ரேயோநுபச்யாமி ஹத்வா ஸ்வஜநமாஹவே 31**

கேசவனே! தீமையைப் பயக்கும் கெட்ட சகுனங்களையும் காண்கிறேன். போரில் உறவினர்களைக் கொன்று ஒரு நற்பயனையும் நான் (பெறப் போவதாகக்) காணவில்லை.

**நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண நசராஜ்யம் ஸுகாநிச**
**கிம் நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைர் ஜீவிதேந வா 32**

கண்ணா வெற்றியையும் அரசையும், சுகத்தையும் நான் விரும்பவில்லை. கோவிந்தா! எங்களுக்கு அரசினாலோ, போகங்களாலோ, நாங்கள் உயிரோடு இருப்பதனாலோ என்ன பயன்?

# திருக்கடன் மல்லை

## T. A. பாஷ்யம்

**கண்ணன் :** பார்த்தா ! இன்று நாம் ஒரு முக்கியமான திவ்யதேசம் செல்கின்றோம். இந்த திவ்ய தேசம், பக்தர்கள் அனைவரும் அவசியம் சேவிக்க வேண்டிய திவ்ய ஸ்தலமாகும். அதே சமயம் "சுற்றுலா" எனும் முறையில் பற்பல கற் கோயில்கள் மற்றும் கற்சிற்பங்கள், அழகிய கடற்கரை ஆகியவைகளைக் கண்டு களிக்கும் ஊராகவும் அமைந்த ஒரு அற்புதமான இடமாகும்.

**பார்த்தன் :** அப்படியா ! இந்த திவ்ய தேசத்தின் பெயர் என்ன ?

**கண்ணன் :** இப்போது நாம் செல்லப் போகிற திவ்ய தேசம் திருக்கடன்மல்லை எனும் ஸ்தலமாகும்.

**பார்த்தன் :** திருக்கடன்மல்லையா ? இது எங்குள்ளது ?

**கண்ணன் :** என்ன பார்த்தா ! திருக்கடன்மல்லை கூடவா தெரியாது ! உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, பலரும் திருக்கடன்மல்லையாகிற ஊரினைத் தெரிந்தும் இந்தப் பெயர் மட்டும் அறிந்திருக்க மாட்டார்கள்.

**பார்த்தன் :** கண்ணா ! புதிர் போடாமல் ஊரினைப் பற்றிதான் சொல்லேன.

**கண்ணன் :** சரி. சொல்லுகின்றேன். 'மஹாபலிபுரம்' என்று பலரும் போற்றிப் புகழும் இடம்தான் நம் ஸம்ப்ரதாயப் படி 'திருக்கடன்மல்லை' என வழங்கப்படுகிறது. இந்த திவ்ய தேசம் சென்னையிலிருந்து 38 கிலோ மீட்டரில் அமைந்

துள்ளது. திருவிடவெந்தையிலிருந்து $12\frac{1}{2}$ kmல் உள்ளது. செங்கல்பட்டு திருக்கழுக்குன்றம் வழியாகவும் இந்த ஊரினை அடையலாம்.

**பார்த்தன் :** எந்த வழியாகப் போகலாம் ?

**கண்ணன் :** சென்னை பிராட்வே பஸ் ஸ்டாண்டிலிருந்து மஹாபலிபுரத்திற்கு, கோவளம், முட்டுக்காடு வழியாகச் செல்லும் பஸ்ஸிலாவது, அல்லது திருப்போரூர் வழியாகச் செல்லும் பஸ்ஸிலாவது போகலாம். சென்னையிலிருந்து புதுப்பட்டினம் காலனி போகும் பஸ்மூலமாகவும் மஹாபலி புரம் போகலாம். ரயில் மார்க்கம் கிடையாது. இப்போது நாம் இந்தத் திருவிடவெந்தையிலிருந்து 19A பஸ் பிடித்து மஹாபலிபுரம் போவோம்.

**பார்த்தன் :** ஊரை அடைவதற்குள் திவ்ய தேச மஹிமையைக் கொஞ்சம் சொல் கண்ணா ?

**கண்ணன் :** இதுவரை நாம் சேவித்த திவ்ய தேசங் களுக்கெல்லாம் ஒருபெருமை என்றால், இந்த திவ்யதேசத் திற்கு இரண்டு பெருமைகளாகும். ஆழ்வார்களுள் இரண்டாவது ஆழ்வாரான பூதத்தாழ்வார் இவ்வூரில்தான் அவதரித்தார். எனவே இது ஆழ்வாரவதார ஸ்தலம் என்ற பெருமையோடு, திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார் ஆகிய இரு ஆழ்வார்களால் பாடப்பெற்று திவ்யதேசம் என்ற பெருமையையும் வகிக்கிறது.

**பார்த்தன் :** இத்தலத்தின் புராண வரலாறு ?

**கண்ணன் :** புண்டரீகர் எனும் மகரிஷி எம்பெருமானு டைய திருவடிகளை தாமரை மலர்களால் அர்ச்சிப்பதையே விரதமாகக் கொண்டு திவ்யதேசங்கள்தோறும் எம்பெருமான் களை ஆராதித்து வந்தார். அவர் திருவிடவெந்தையை

ஆராதித்துவிட்டு, பிறகு பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் பரந்தாமனையும் தாமரை மலர்களால் ஆராதிக்க எண்ணம் கொண்டு கிழக்குமுகமாகச் செல்ல ஆரம்பித்தார். இடையில் சமுத்திரம் தடைப்பட்டது. அந்த சமுத்திர நீரைத் தூர்த்து தாம் எண்ணியபடி திருப்பாற் கடலை அடைய எண்ணி, கடலின் அருகில் உயர்ந்த கரையைக் கட்டி, தம் கைகளால் கடல்நீரை வாரி இறைத்துக் கொண்டிருந்தார். இவரது மனவுறுதியைக் கண்டு மனமிரங்கிய எம்பெருமான் கடற்கரையில் தரையிலே (ஸ்தலத்திலே) சயனித்த திருக் கோலமாக இவருக்கு ஸேவை ஸாதித்தான். அவ்வாறு ஸ்தலத்திலே சயனித்துக் கொண்டிருந்த எம்பெருமானை ஆராப்திநாதனுகவே கொண்டு தாமரை மலர்களை திருவடி களிலே ஸமர்ப்பித்தார். அது முதல் எம்பெருமான் ஸ்தல சயனப் பெருமாள் என்ற திருநாமத்தோடு பக்தர்களுக்கு ஸேவை தருகிறான்.

**பார்த்தன்:** அதோ கோபுரம் தெரிகிறதே. நாம் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது போலிருக்கிறதே!

**கண்ணன்:** ஆம். நேரே சன்னதிக்குள் செல்வோம். இதோ பார், ஸ்தலசயனப் பெருமான் மூலவர் 4 திருக்கரங்க ளோடு கிழக்கு முகமாய் சயனித்துள்ளதை ஸேவி. நன்றாக கவனித்து ஸேவி. ஆதிசேஷனுகிற படுக்கை இல்லாமல் வெறுந் தரையிலே சயனித்திருக்கிறான். ஒருகையை தலைக்கு 'அணை யாகவும் மற்றொரு கையை 'என் திருவடிகளையே அடைக்கல மாகப் பற்றுவாய்' என்று தனது திருவடிகளைச் சுட்டிக் காட்டிக் கொண்டும் மற்ற இரு கரங்களை புண்டரீக மகரிஷிக் காக சமுத்திரநீரை வாரியிறைத்த கோலத்திலும் இருக்கிறான். திருவடியருகில் புண்டரீக மகரிஷி கைகூப்பிய வண்ணம் நிற்க, அவர் சமர்ப்பித்துள்ள தாமரை மலர்மீது தனது திருவடிகளை வைத்துள்ளான். மூலவருக்கு முன்பாக உத்ஸவர் (தலசயனத் துறைவார்) எழுந்தருளியுள்ளார். இவருக்குப் பக்கத்தில்

மற்ருெரு உத்ஸவர் எழுந்தருளியுள்ளார். இவர் கடலுக்கு மிக சமீபத்திலுள்ள (கடற்கரை) கோயிலிலுள்ள எம்பெருமானின் உத்ஸவர் என்றும், இவரே மிகவும் தொன்மையானவர் என்றும் கூறுவர். பிரதக்ஷிணத்தில் வலதுபுறம் நிலமங்கைத் தாயார் சன்னிதியும், இடதுபுறம் ஆண்டாள், ராமன் சன்னிதிகளும் உள்ளன. இதோ! இதுதான் இவ்வூரில் அவதரித்த பூதத்தாழ்வார் சன்னிதி. மூலவர் ''ஞானத்தமிழ் புரிந்த நான்'' என்பதற்குச் சேர தமது வலது திருக்கரத்தை திருமார்பின்மேல் உபதேச முத்திரையாக வைத்துள்ளார். உத்ஸவர் கூப்பிய கரங்களுடன் எழுந்தருளியுள்ளார்.

**பார்த்தன்:** ஆக, கோவிலை நாம் நன்ருகச் சேவித்து விட்டோம். இன்னும் பார்க்க வேண்டிய இடங்கள் நிறைய இருப்பதாகச் சொன்னுயே!

**கண்ணன்:** ஆம் பார்த்தா! இனி மற்ற இடங்களுக்குச் செல்வோம். வராஹப் பெருமாள் ஸன்னிதியாகிற ஞானப்பிரான் ஸன்னிதி தனியாக இந்த ஸன்னிதியிலிருந்து 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. இப்போது நாம் ஸன்னிதி அர்ச்சகரையும் நம்முடன் அழைத்துக் கொண்டு செல்வோம் வா. இந்த ஸ்தலசயனப்பிரான் ஸன்னிதிக்குப் பின்புறம் சென்ருல் அங்கே பல்லவர் காலத்திய சிற்பங்கள், மற்றும் கற்கோயில்கள் பலவற்றையும் காணலாம். இதோ இதுதான் ''பகீரதன் தவம்'' எனப்படும் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட சிற்பம். இதற்குப் பக்கத்தில் பஞ்சபாண்டவர் மண்டபம், கோவர்த்தன மண்டபம் முதலியன உள்ளன. ''பகீரதன் தவம்'' சிற்பங்கட்கு பின்புறம் மலைமீதும் பல பல சிற்பங்கள் உள்ளன. அதில் வராஹப் பெருமாள்—திரிவிக்கிரமாவதார சிற்பங்கள் கண்டு களிக்கக்கூடியவை. இவைகளை எல்லாம் பார்.

**பார்த்தன்:** கண்ணு! இது என்ன! மலைமீது கோயில் கட்ட ஏற்பாடுகள் நடைபெற்று பாதியில் நின்றுள்ளனவே. இது ஏன்?

**கண்ணன் :** பார்த்தா! பல்லவர்கள் இந்த ஊரில் பற்பல கற்கோயில்களையும் கற்சிற்பங்களையும் வடித்தும் திருப்தி அடையாமல் இந்த ஊருக்கே நாயகனான ஸ்தல சயனப் பெருமானுக்கு இந்த மலைமீது ப்ரம்மாண்டமான கோயில் எழுப்ப முயற்சி செய்து சிறிதளவு கட்டவும் ஆரம்பித்ததாகவும், அந்த பல்லவ மன்னனின் கனவில் எம்பெருமான் ஒருநாள் தோன்றி எனது பெயர் தலசயனம் என்பது ஆதலால் நான் பூமியில் சயனித்திருப்பதனையே விரும்புகின்றேன். கீழே உள்ள ஸன்னிதியையே நான் மிகவும் உகந்து சயனித்துள்ளேன். ஆதலால் மலைமீது எனக்குக் கோயில் கட்ட வேண்டாம் என்று கூறிவிட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதை ஒன்று நிலவுகின்றது. இனி கீழே இறங்கி இந்த சாலை வழியே போவோம். இதுதான் "அருச்சுனன் தவம்" எனப்படும் பூர்த்தி பெறாத நிலையில் உள்ள சிற்பங்கள். இதோ மற்றொரு மலைமீது உள்ளதுதான் பழைய லைட் ஹவுஸ். இனி இப்படியே நேராகச் சென்றால் பஞ்ச பாண்டவர்கள் ரதத்தினை அடையலாம். அதற்கு முன்பு இந்த வலதுபுறம் செல்லும் சாலையில் சுமார் 1 பர்லாங்கு தூரம் சென்றால் நான் முன்பு கூறிய ஞானப்பிரான் ஸன்னிதியினை ஸேவிக்கலாம். இந்த ஞானப் பிரானையும் நம் திருமங்கை ஆழ்வார் தமது பெரிய திருமொழி 2-ஆம் பத்து 6-ம் திருமொழி 3-வது பாசுரமாகிற ஏனத்தினுருவாகி .. **ஞானத்தின் ஒளி உரு...** என மங்களாசாஸனம் செய்தருளுகின்றார். இந்த ஞானப்பிரான் சுதா ரூபியாய் தமது வலது திருத் தொடையின்மீது பூமிப் பிராட்டியோடு எழுந்தருளியுள்ளான். மூலவருக்கு முன்பு உத்ஸவர் எழுந்தருளியுள்ளார் இவருக்கும் புராண வரலாறுகள் உண்டு. இந்த ஸன்னிதியில்தான் மகேந்திரவர்ம பல்லவன்—நரசிம்மவர்ம பல்லவன் கற்சிலைகளும் உள்ளன.

**பார்த்தன் :** இவர் நாம் திருவிட வெந்தையில் சேவித்த எம்பெருமான் போலவே இருக்கிறாரே!

**கண்ணன் :** அவர் தமது இடதுபுறம் பூமிப்பிராட்டியை வைத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் இவர் பூமிப்பிராட்டியை வலதுபுறம் வைத்துக் கொண்டிருக்கிறார். இனி நாம் பஞ்ச

பாண்டவர் ரதங்களைப் பார்த்துவிட்டு அப்படியே கடற்கரைக்குச் சென்று கடற்கரைக் கோயிலைக் காணலாம். இந்த கடற்கரைக் கோயிலின் நடுவில் எம்பெருமான் கடலை நோக்கி தரையில் அற்புதமாக சயனித்துள்ளார். இந்த எம்பெருமானையே ப்ராசீனமானவர் என்றும், ஆழ்வார்கள் மங்களாசாஸனம் செய்துள்ளது இந்த எம்பெருமானையே என்றும் கூறுவர். இவருடைய உத்ஸவரையே நாம் சற்று முன்பு கோயிலில் சேவித்தோம். இனி நாம் மறுபடி ஊருக்குள் (ஸந்நிதிக்கு) செல்லும் சாலையில் உள்ள புஷ்கரணியையும் அதற்கு எதிர்ப்புறம் உள்ள மிகச் சிறிய திருக்குளத்தையும் பார்க்கலாம். இந்த சிறிய திருக்குளத்தில்தான் அல்லிப் பூவில் பூதத்தாழ்வார் திருவவதரித்தார்

**பார்த்தன் :** இங்கு நடைபெறும் முக்கிய உத்ஸவங்கள் என்னென்ன?

**கண்ணன் :** இங்கு ஆராதனம் வைகானஸ ஆகமப்படி நடைபெறுகிறது. சித்திரை மாதம் ச்ரவண நக்ஷத்திரம் தீர்த்தவாரியாக ப்ரம்மோத்ஸவமும், ஐப்பசி மாதம் அவிட்ட நக்ஷத்திரம் முடிவாக பூதத்தாழ்வார் திருநக்ஷத்திர மஹோத்ஸவமும் மாசி மகம் தீர்த்தவாரி உற்சவமும் மாசி மகத்திற்கு முதல் நாள் தெப்போத்ஸவமும் நடைபெறுகின்றன. மாசி மக தீர்த்தவாரிக்கு ஸ்தலசயனப் பெருமாளும், ஞானப்பிரானும் இரண்டு கருட வாகனத்தில் சமுத்திரக் கரைக்கு எழுந்தருளி தீர்த்தவாரி நடைபெறும் காட்சி கண்ணுக்கு இனிய காட்சியாகும். இந்த ஸ்தலசயனப் பெருமாள் ஸந்நிதி மிகவும் சிதிலமடைந்துள்ளதைக் கண்டாயா பார்த்தா. இதனை சீரிய முறையில் திருப்பணி செய்து ஸம்ப்ரோக்ஷணம் நடத்த திட்டமிட்டு திருப்பணி வேலைகள் அடுத்த மாதம் முதல் நடைபெற உள்ளது. இதற்கு வேண்டிய திரவிய சகாயம் செய்ய அனைவரும் முன்வர வேண்டும்.

# தேவு மற்றறியேன்—12

Dr V. V. ராமாநுஜம்

இவ்வுலகில் நாம் விரும்பி வேண்டுவது கிடையாம லிருப்பதும், வேண்டாமென்று புறக்கணிப்பது நம்மை நாடித் தானே வருவதும் ஸாமான்யமாகப் பெரும்பாலோருடைய அநுபவங்களாகும். "நாயமாத்மா ப்ரவசநேந லப்ய:" என்று தொடங்கும் ச்ருதி வாக்யங்கள் (கடோபநிஷத்) ப்ரஸித்த மானவை. இவற்றின் திரண்ட பொருளாவது — இந்த ஆத்மா (ப்ரஹ்மசப்த வாச்யனான பரம புருஷன்) ச்ரவணம், மநநம், உபாஸனம் இவைகளால் பெறற்கரியவர். யாரை இவர் விரும்புவாரோ அவரால் பெறற்குரியவர். அவர்க்கு இவர் (ஆத்மா) தன்னை நன்று விளங்கும்படி காட்டித் தருகிறார். நமது மதுரகவிகள் விஷயத்தில் இது முற்றும் உண்மையாயிற்று. இவர் பற்றியதோ நம்மாழ்வாரை. விரும்பிப் பற்றப்பட்ட ஆழ்வாரும் அருள் சுரந்தார். இவர் புறக் கணித்த பரமாத்மதத்வமும் தன் ஸ்வரூபத்தை மட்டுமின்றி திவ்யமங்கள விக்ரஹமான **கரிய கோலத் திருவுருவையும்** நன்கு விளங்கக் காட்டியது. ஆழ்வாரைத் தேவு மற்றறியேன் என்று எல்லாமாகப் பற்றியதால் தாம்பெற்ற பேறு இது என்று இவர் மகிழ்ந்து கூறுவதை மூன்றும் பாசுரத்தில் அநுபவித்தோம். மேலே, தமது தாழ்மையைச் சொல்லி, தம்மிடம் உள்ள தோஷங்களையே பச்சையாகச் (உபகாரமாக) அங்கீகரித்த ஆழ்வாரே அத்தோஷங்களைப் போக்கவல்ல நிறைவாளர் (பூர்த்தியுள்ளவர்) என்கிறார். இதோ பாசுரம் :

**நன்மையால் மிக்க நான்மறை யாளர்கள்**
**புன்மையாகக் கருதுவராதலில்**
**அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும்**
**தன்மையான் சடகோபன் என்நம்பியே** (4)

விரோதிகளுக்கும் உதவும்படியான மிக்க கருணையுள்ளம் படைத்த நல்வேதியர்களும் என்னைப் புன்மையே ஒருவடி வெடுத்தவனாக (தோஷஸ்வரூபமாகவே) கருதி விலக்குவர். ஆழ்வார் (சடகோபன்) ஒருவரே அன்புடைய தாய், நன்மை கோரும் தந்தை, என் நிலைக்குச் சேர அடிமை கொண்டு ரக்ஷிக்கும் நாயகன் இவை எல்லாமாக இருந்து என் அகவிருளைப் போக்கவல்ல பூர்த்தியுடைய என் ஸ்வாமி ஆவார்.

நன்மையால் மிக்க நான்மறையாளர்களாகிறார் — தான் கண்ணிழக்கைக்கும், தமது பரமாசார்யராகிய பெரிய நம்பி உயிரிழக்கைக்கும் காரணமான நாலூரானுக்கும் இரங்கி தேவப் பெருமாளை வேண்டி நற்பேறு பெறுவித்த கூரத்தாழ்வான், தன்னை மிக வருத்திய அரக்கியரையும் அவர்கள் வேண்டிக் கொள்ளாதிருக்க, "பவேயம் சரணம் ஹி வ:" என்று அபயம் தந்து காத்தருளிய ஸீதாபிராட்டி, தன்னை முடிக்கப் பல வழியிலும் முயன்ற இரணியனுக்கும் பேறளிக்கும்படி நரசிங்கப் பிரானை வேண்டிய பிரஹ்லாதாழ்வான் போன்றவர். "ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம:" என்று நன்கறிந்தவரே வேதங்களைத் தெளியக் கற்றவர்கள். இப்படிப்பட்டவரும் என்னை என்புன்மையடியாக விலக்கினர்.

இவர்கள் விலக்குகைக் கடியான புன்மையே அடியாக ஆழ்வார் தன்னை விட்டால் எனக்கு வேறு ரக்ஷகரில்லை என்று கொண்டு ரக்ஷித்தருளினார், இது ஆழ்வாருடைய தன்மை — இயல்பு. "தாயாய்த் தந்தையாய் அறியாதன அறிவித்த அத்தா" என்று எம்பெருமானைக் கொண்டாடுகிறார் ஆழ்வார். அதே முறையில் ஆழ்வாரைக் கொண்டாடுகிறார் மதுரகவி. தாய் காட்டும் அன்பும், தமப்பன் நோக்கும் நலனும், எல்லாம் ஆழ்வாரிடம் கிட்டிற்று இவர்க்கு. தாய் செய்வது, தகப்பன் செய்வது, ஆசார்யன் செய்வது எல்லாமுமே செய்துப் பணி கொண்டார் ஆழ்வார். ஆழ்வாரைப் போன்ற நிறைந்த உபகாரகர் எனக்கு வேறு யாருமில்லை. ஆண்டிடுகை—பகவத் விஷயத்துக்கு ஆளாக்குகை.

நல்லவர்களும் கைவிடுகைக்கு ஹேதுவான தம் புன்மையை விவரித்து ஆழ்வாருடைய நிர்ஹேதுக கிருபைக்கு ஆளாகிப் பிழைத்தமையைச் சொல்லுகிறார் ஐந்தாம் பாட்டில்:

நம்பினேன் பிறர் நன்பொருள் தன்னையும்
நம்பினேன் மடவாரையும் முன்னெலாம்
செம்பொன் மாடத்திருக் குருகூர் நம்பிக்
கன்பனாய் அடியேன் சதிர்த்தேன் இன்றே. (5)

வெகுகாலமாக எம்பெருமானுடைய நன் பொருளான ஆத்மவஸ்துவை என்னது என்று கொண்டு ஸ்வதந்த்ரனாகப் போந்தேன். பதிவ்ரதைகளான பிறர் மனைவாட்டியரை ஆசைப்பட்டேன். இன்று பொன் வேய்ந்ததுபோல அழகான மாடங்களையுடைய திருநகரிக்கு நிர்வாககராய் எழுந்தருளியுள்ள ஆழ்வாரின் (திருக்குருகூர் நம்பியின்) நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு ஆளாகி அவருடைய அடியனாய் சதிர் பெற்றேன். (சதிர் — சிறப்பு ; நம்பி — பூர்ணன், நிறைவானவன்).

நான் என்னதாக மதித்தது (நம்புதல்—மதித்தல்) ஒரு நன்பொருளை, அதுவும் பிறருடையது "எண்பெருக்கந் நலத்து ஒண் பொருள்" என்றார் ஆழ்வார். நன்பொருளென்றது ஆத்ம வஸ்துவை 'நித்யமாய், நிர்விகாரமாய், அத்யந்த விலக்ஷணமாய், ஸ்வயம்ப்ரகாசமாய், ஸ்வாபவதோ போக்ய மாய் இருக்கையாலே நன்பொருளென்கிறார்.' என்று காட்டு கின்றனர் நம் ஆசார்யர்கள். பிறரென்பது ஸர்வேச்வரனை. அவன் இப்பொருளைத் தன் மார்பிலணியும் கௌஸ்துபமணி போன்று உயர்ந்ததாக மதிக்கிறான் ஸர்வேச்வரனுக்கே உரியதான இந்த ஆத்ம வஸ்துவை என்னதாக எண்ணியிருந் தேன். தேஹாத்மாபிமானியாய் சரீரமே ஆத்மா என்று வெகு காலமாய், பல ஜன்மங்களெடுத்துத் திரிந்தேன். சரீரமே ஆத்மா என்றிருப்பவன் சரீரத்தையே விரும்புவான். நான்

பிறருடைய மடந்தையரை ஆசைப்பட்டேன். இப்படி விரும் பத்தகாதவைகளை மிக விரும்பிப் போது போக்கிய என்னை ஆழ்வார் தம் நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு ஆளாக்கி ரக்ஷித் தருளினார். நான் அவருக்கு அன்பனாய் சேஷப் பொருளா னேன் (அடியனானேன்). ஆழ்வாரிடம் அன்பு மேலோங்கப் பெற்று, அதனால் சிறப்புற்றேன். "யானே நீ என்னுடைமை யும் நீயே" என்று ஆழ்வார் பகவத்விஷயத்தில் இட்டதுபோல் அடியேன் ஆத்மாத்மீயங்களை ஆழ்வாருடையதாக்கி சதிர் பெற்றேன். இந்த ரக்ஷணப்ரகாரம் ஆழ்வார் ஒருவருக்கே உரியதாகும். இங்கு நம் பிள்ளையின் ஸாரமான ஸ்ரீஸூக்தி காண்மின்: "ஆசார்யர்களை நம்பி என்கைக்கும் அவர்கள் அழைத்தால் அடியேன் என் கைக்கும் ஹேது ஸ்ரீ மதுரகவிகள் வாஸனையாய்த்து".

இப்படி என்னை வாழ்வித்தருளிய பூர்ணரான ஆழ்வார் இனி என்னை எப்போதும் கைவிடமாட்டார் என்கிறார் மேலே.

இன்றுதொட்டும் எழுமையும் எம்பிரான்
நின்றுதன்புகழ் ஏத்த அருளினான்
குன்றமாடத் திருக்குருகூர் நம்பி
என்றுமென்னை இகழ்விலன் காண்மினே. (6)

இன்று முதற்கொண்டு மேலுள்ள காலமெல்லாம் எனக்கு ஸ்வாமியான ஆழ்வார் தம்முடைய கல்யாண குணங்களை விச்வாஸ பூர்வகமாய் நிலைநின்று புகழ்ந்து பாடும்படி (பாடி உய்யும்படி) க்ருபை பண்ணினார். உயர்ந்த மாடங்களையுடைய திருக்குருகூருக்கு ஸ்வாமியாய் எழுந்தருளியுள்ள ஆழ்வார் இனி என்னைத் தாழவிடமாட்டார். இது ஸத்யம். நீங்களே பாருங்கள். ஆழ்வாருக்கு ஆளான காலமே கொண்டு மேல் வரும் காலமெல்லாம் எனக்கு அருள் பாலித்தார் அவர். எம்பெருமான் ஆழ்வார் போல உடனே பலன் தருவதில்லை. *மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான் அவன். கால

தாமதம் செய்து பலன் தருவது அவன் இயல்பு. நம்பி என்றார் ஆழ்வார் பூர்த்தியையிட்டு மூன்னர். இங்கு எம்பிரான் என்கிறார். பேருபகாரம் பண்ணியவர் என்றபடி. என்னுடைய அஹங்கார மமகாரங்களை வெட்டிக் களைந்து, பகவத் விஷயத்திலும் காட்டித் தராமல் தாமே கைக்கொண்டு, மீண்டும் தாழவிடாமல், கைவிடாமல் காத்தருளும் பேருதவியாளன். புன்மையான என்னை நிலை நின்று தமது நிகரில்லாப் புகழைப் போற்றிப் பாடும்படி அருள் புரிந்தார். ஆழ்வார் புகழும் எம்பெருமானது போல நிகரில் புகழே. *அன்னையாய் அத்தனாய் என்றார் ஏற்கனவே. அங்கு சொன்ன வாத்ஸல்யமே நிகரில் புகழ். *உருகா நிற்பர் நீராயே என்று உருகாமல் நின்று இதன் பெருமை பாடுகைக்கு ஆழ்வாருடைய க்ருபை அவச்யம் வேணும்.

(தொடரும்)

With best wishes of :

# UDIPI HOME

**BOARDING AND LODGING**

**(Near Egmore Automatic Signal Light)**

★

Telephone : 842083 (10 Lines)

Telegram : "UDIPIHOME"

EGMORE — MADRAS-600 008

# திருக்கடன் மல்லை

**தலைநகரும் துறைமுகமும்:** திருக்கடன் மல்லைக்கு மாமல்லபுரம் என்றும் பெயர். இவ்வூர் கப்பல்கள் தங்கும் துறைமுகமாக இருந்தது பல்லவர்கள் காலத்தில். வணிகக் கப்பல்கள் இவ்வூருக்கு வந்து சென்று கொண்டிருந்ததைக் கண்ட திருமங்கை ஆழ்வார் **கலங்கள் இயங்கும்** மல்லை என்று வியந்து பாடினார். திடீரென்று பகவானுடைய வாத்ஸல்யம் (பேரன்பு) என்ற கப்பல் மாமல்லைக்கு வந்ததாம். பவழங்களை

## ஸ்தலசயனத்துறைவார்

யும், முத்துக்களையும் இறக்கியதாம். துறைமுகத்தில் வந்தது தலைநகருக்குக் கொண்டு செல்லப்படுமல்லவா! அதுபோல கப்பலிலிருந்து இறங்கிய பவளத்தூண் பல்லவர்களின் தலைநகராகிய காஞ்சியில், திருவெஃகாவில் யதோக்தகாரியாகக் கிடந்ததாம். முத்துக்கள் சேரும் கடன் மல்லையில் வந்த நன்முத்து பூதத்தாழ்வாரே.

**ஏனத்துருவாகிய ஞானப்பிரான்:** பகவான் மேற்கொண்ட பத்து அவதாரங்களில் வராஹாவதாரத்திற்குத் தனிச் சிறப்புண்டு. இந்த எம்பெருமானை வணங்கினால் நன்னருஞானம் பெறுவர். திருக்கடல் மல்லையில் எழுந்தருளி இருக்கும் வராஹப் பெருமானுக்கு 'ஞானப்பிரான்' என்றே பெயர். 'ஞானத்தினொளியுரு' என்று ஆழ்வார் கூறுகிறார். நம்மாழ்வாருக்கு ஏனத்துருவாய ஞானப்பிரானிடம் மிக்க ஈடுபாடு. பூமிப் பிராட்டிக்குச் சில உறுதிமொழிகளை அளிக்கும் வகையில் 'ஸ்திதேமனஸி' என்ற சுலோகத்தை அருளி

உலகினுக்குத் தந்து உதவியவர் வராஹப் பெருமாள்! நம் பாடுவாரின் வரலாற்றைக் கூறும் வாயிலாகக் கைசிக புராணத்தைத் தோற்றுவித்தவரே வராஹப் பெருமாள்தான்! நம்மாழ்வார் தமது முதல் பிரபந்தமான திருவிருத்தத்தின் முடிவில் 'ஞானப்பிரானை அல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே' என்று அறுதியிட்டுக் கூறினார். தன்னுடைய கடைசிப் பிரபந்தமான திருவாய்மொழியின் முடிவிலும், 'கோலவராகமொன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட வெந்தாய்!...உன்னைப் பெற்று இனிப் 'போக்குவனோ' என்று கூறி முடித்தார். கடல் மல்லையில் இருக்கும் வராகப் பெருமான் பூமிப் பிராட்டியை வலப்பக்கத்தில் தாங்கி நிற்கிறார். ஆதலால், இவருக்கு வலவெந்தை எம்பெருமான் என்றும் பெயர். பகவான் ஏனத்தின் உருவாகிக் கானத்தில் விளையாடினான். ஏனமாகிய ஞானப்பிரானும் கானத்தின் கடல் மல்லையில் (இங்கு) வாழ்கிறார். தினந்தோறும் தேவர்களும் இங்கு வந்து தலசயனத்துறைவாரையும், ஞானப்பிரானையும் வணங்குகிறார்கள்.

**பறித்தவர் யார்? பறி கொடுத்தவர் யார்?** பகவானுக்கு உயிராக இருப்பவர்கள் அவனடியார்கள்! அவர்கள் பாகவதோத்தமர்கள். பாகவதர்களை (ஸ்ரீ வைஷ்ணவர்களை) ஆராதிப்பது, பகவானை ஆராதிப்பதினும் சிறந்தது. இதனை உணர்ந்த திருமங்கை மன்னன் ('ஆழ்வார்' என்ற நிலையை அடைவதற்கு முன்) பாகவதர்களை ஆராதிக்கப் பொருள் வேண்டித் திருமணங் கொல்லையில் வழிப்பறி செய்யக் காத்திருந்தார். இவரை ஆட்கொள்ள எண்ணிய பகவானும் பிராட்டியும் விலை உயர்ந்த அணிகளை அணிந்து கொண்டு திருமணக் கோலத்தோடு அவ்வழியே வந்தனர். திருமங்கை மன்னன் அவர்களை விடவில்லை. வழிபறித்துப் பொருள் பறித்தார்; பகவானும் திருமங்கை மன்னனிடம் பொருள்களைப் பறி கொடுத்தான் என்று கூறப்படுகிறது.

திருமங்கை மன்னன் ஆழ்வாராக ஆனபிறகு திருக்கடல் மல்லைக்கு எழுந்தருளினார். பேரழகு வெள்ளமிடப் படுத்திருக்கும் தலசயனப் பெருமாளின் திருமேனி ஸௌந்தரியத்தில் மனதைப் பறி கொடுத்தார்.

தலசயனப் பெருமாள் உலகைக் காக்க இலையில் படுத்தார்! கடமையைச் செய்யக் கடலில் படுத்தார்! தம் அடியார்களுக்காக (இங்கு) தரையில் படுத்திருக்கிறார்! 'பகவானே! கை வண்ணம் தாமரை! வாய் கமலம் போலும்! கண்ணிணையும் அரவிந்தம்! அடியும் அஃதே! அப்படிப்பட்ட உனக்கும் மலரில் ஆசையா! புண்டரீக மாமுனிவர் வைத்திருந்த மலரில் பக்தி மணம் வீசியதோ! ஏன் இந்த மோகம்! அதற்காக அழகிய பாற்கடலையும், மெத்தென்ற பஞ்சசயனத்தையும் (ஆதிசேஷனையும்) விட்டு இங்கு வந்தனையோ! தலையணையும் இன்றிக் கருந்தரையில் படுக்க எப்போது கற்றனை! 'பாகவத சேஷத்வம் தரை பற்றிக் கிடக்கிறதே!' என்று மனமுருகிப் பேசினார். இப்படிப்பட்டவர்களை வளைத்துப் பிடிக்க வன்றோ எம்பெருமான் பல இடங்களில் நின்றும், அமர்ந்தும், கிடந்தும் இருக்கிறான். இப்போது பார்த்தீர்களா? மனத்தைப் பறி கொடுத்தவர் திருமங்கையாழ்வார்; பறித்தவன் பகவான். அறிந்து கொண்டீர்களா? பறித்தவர் யார்? பறிகொடுத்தவர் யார்?

**நம்புங்கள்! பயன் கிடைக்கும்!** மனிதனுக்கு பலம் நம்பிக்கையில்தான். எந்தச் செயலிலும் நம்பிக்கை வேண்டும். பிறரை நம்பாமல் உலகில் வாழ இயலாது! ஆசிரியர், அறியாமையை நீக்குவார் என்று நம்புகிறவன் கல்வியில் தேர்ந்து விளங்குகிறான். மருத்துவரின் மருந்து நோயைத் தீர்க்கும் என்று நம்பி உட்கொண்டால் நோய் தீர்ந்து விடுகிறது திருமந்திரம் நமக்கு வேண்டிய பயன்களைக் கொடுத்துக் காப்பாற்றும் என்று நம்பினால் அப்படியே அது காப்பாற்றுகிறது. தினந்தோறும் கோவிலுக்குச் செல்வதைத்

கொண்டே பகவனே காப்பாற்றிவிடுவான் என்று எண்ணி விட வேண்டாம் பகவான் காப்பாற்றியே தீர்வான் என்ற நம்பிக்கையோடு வணங்கவேண்டும். தலசயனப் பெருமான் கண்ணனாகப் பிறந்து குவலயாபீடம் என்ற யானையின் தந்தங்களைப் பறித்தான். உந்து மத களிற்றினையும் பாகனையும் வீழ்த்தி அழித்தான். மல்லர்களைக் கொன்றான். ஆதலால் இவரே நம்மைக் காப்பார்! 'யோக க்ஷேமம் வஹாம்யஹம்' என்றும் 'மாமேகம் சரணம் வ்ரஜ' என்றும் சொன்னவனும் இவனே! நமக்கு எப்போதும் இவனே தஞ்சம் என்று நினைத்து நம்பிக்கையுடன் தலசயனத்துறைவாரை வணங்குமாறு பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அறிவுரை கூறுகிறார்.

செறிந்த பணைபறித்துத் திண்களிற்றைச் சாடி
முறிந்து விழப்பாகனையுமோதி—யெறிந்து
தருக்கு அடல்மல்லைக்கு மைத்தான் தஞ்சமென்றுநெஞ்சே!
திருக்கடன் மல்லைக்குட்டிரி

நூற்-திருப். அந்தாதி-93

**கடலைத் தொடாதீர்!** திருக்கடல்மல்லைக்கு 'அர்த்த சேது' என்று ஒரு பெயர். இவ்வூர்க் கடலில் எப்போது வேண்டுமானாலும் ஸ்நானம் செய்யலாம்; நீராடலாம் என்று கூறுகிறார்கள். நாங்களும் கடல் நீராடலாம் என்று நினைத்தோமே 'கடலைத் தொடாதீர்' என்று கூறுகிறீரே என்று கேளாதீர்! இவ்வூரில் அவதரித்து இவ்வூரிலேயே வாழும் பூதத்தாழ்வாரும் கடலைத் தொட்டதில்லை! ஏன் தெரியுமா? இவருக்குக் கடல் உதவவில்லை! பகவானுக்குப் பெருவிளக்கு ஒன்றை ஏற்ற நினைத்தார். இவருக்கும் முன்பே பொய்கையாழ்வார் உலகத்தைதய்ய தகளியாக்கி விட்டார் (அகலாக ஆக்கிவிட்டார்.) அதில் கடல்நீரை நெய்யாகச் சேர்த்து

விட்டார்! தான் ஏற்றும் விளக்கிலும் பூதத்தாழ்வார் கடல் நீரை நெய்யாகச் சேர்க்க நினைத்தார். உடனே 'கடலைத் தொடாதீர்! அது பொய்கையாழ்வாரைச் சேர்ந்துவிட்டது!' என்று ஒரு குரல் ஒலித்தது! உடனே ஆழ்வார் (பூதத்தாழ்வார்) தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். பகவானிடம் கொண்டுள்ள அன்பினைத் தகளியாகச் செய்தார்; ஆர்வத்தை நெய்யாக அதில் சேர்த்தார். இன்புருகும் சிந்தையைத் திரியாக இட்டு, ஞான விளக்கு ஏற்றிவிட்டார். மக்களும் பூதத்தாழ்வார் ஏற்றிய விளக்கொளியில்தான் பகவானை ஸேவிக்கத் தொடங்கினார்கள். இவர் ஏற்றிய விளக்கொளியே புறவிருளோடு அகவிருளையும் நீக்கியது என்று கூறப்புகுந்த திருவரங்கத்து அமுதனார், 'இறைவனைக் காணுமிதயத்திருள் கெட ஞானமென்னும் நிறைவிளக்கேற்றிய பூதத்தார்' என்று புகழ்ந்தார்.

With compliments from

# J M. BAXI & CO.

2/21, NORTH BEACH ROAD
MADRAS - 600 001.

Phone : 20016 4 (lines) Post Box
Telex : 626 & 416 Cobles : "BAXICO"

# திருவாய்மொழியும் த்வயமும்

"ஸ்ரீமதே நாராயணாய நம:" இது வாக்யத்வயாத்மகமான த்வயத்தில் உத்தர வாக்யமாகும். திவ்ய மிதுந கைங்கர்ய ப்ரார்த்தநாபர வாக்யமாகும். இதிலே ஸ்ரீமதே என்றும் நாராயணாய என்றும் நம: என்றும் பதங்கள் மூன்றேயாயினும் இதனை ஐந்து பாகங்களாகப் பிரித்து அவற்றினுடைய ஐந்து அர்த்தங்களையும் மேலிட்டு ஐந்து பத்துக்களாலே ஆழ்வார் வெளியிட்டருளுகிறார், என்று ஸாரஸங்க்ரஹம் கூறுகிறது. முதல் பாகம் ஸ்ரீமத் சப்தம். இருவருமான சேர்த்தியிலே கைங்கர்யம் புருஷார்த்தம். அது தோன்ற ஸ்ரீமத் பதத்திலே லக்ஷ்மீ தத்வல்பவர்களுடைய நித்ய ஸம்பந்தம் ப்ரதி பாதிதமாயிற்று. இதற்கு ப்ரமாணமாக ஆறும் பத்துப் பாசுரங்களை பிள்ளை உலகாரியன் தொகுத்து அருளிச் செய்துள்ளார். அவற்றையினி யநுபவிப்போம். (1) "திருந்து வேதமும் வேள்வியும் திருமா மகளிரும்

**வேளுக்குடி K. வரதாசாரியர்**

தாம்" (6-5-8) : திருத்தொலைவில்லி மங்கலத்துக்கு மங்களா சாஸநமான இப்பதிகத்தில் ஆழ்வார் தன்னிலையிழந்து பெண்ணிலையடைந்து தன்னுடைய தசாவிசேஷத்தை தோழிப் பாசுரமாக வெளியிடுகிறார். இப்பாசுரத்தில் அந்த திவ்ய தேசத்தில் ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்கள் குறைவற்றிருக்கிறபடியையருளிச் செய்கிறார். திருந்து வேதம். வேதம் கட்டளைப்பட்டது அவ்வூரில் உள்ளார் பரிக்ரஹித்த பின்பாயிற்று. ஸ்வரூபம் ஜ்ஞாநமாத்ரம் என்கிற ச்ருதிகள். ஜ்ஞாத்ருத்வச்ருதிகள் பேதாபேத ச்ருதிகள். ஸகுண ச்ருதிகள் நிர்குண ச்ருதிகள் இவையடங்க விஷய விபாகத்தாலே

ஒருங்க விட்டிருக்குமவர்கள். "இதி ஸர்வம் ஸமஞ்ஜஸம்" என்றிறே ஸ்ரீபாஷ்யத்தின் முடிவு. ஸர்வ ச்ருதி ஸாமஞ் ஜஸ்யமிறே எம்பெருமானார் தர்சநத்தின் ஏற்றம். திருந்து வேதம் என்று ப்ரமாண ப்ரமாத்ரு ஸம்பத்தி கூறப்பட்டது. "வேள்வி" — வைதிகஸமாராதநம். கற்ற கல்வி அநுஷ்டாந மிறே. வைதிக தர்மங்கள் தான் ஸ்ரீய:பதி ஸமாராதந மாயிறே யிருப்பது. ஆக ஆராதநம் கூறப்பட்டது. ஆராத்ய மான திவ்ய மிதுந வாசகமான சப்தம் "திருமா மகளிரும் தாம்" என்று. ஆராத்யரான பிராட்டியும் அவனும் என்ற படி. ஆகையாலே வேதார்த்த நிஷ்கர்ஷம் செய்திருக்கும் ப்ரமாதாக்கள் வேத விஹித தர்மங்களாகிற திருவாராதநத்தை ததாராத்யனை ஸ்ரீய: பதியினுடைய திருவடிகளிலே செய் கிறார்கள் திருத்தொலைவில்லி மங்கலத்தில் என்றபடி. ஆக கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி ஒரு மிதுநம் என்ற ஸ்ரீமத் பதார்த்தம் கூறப்பட்டதாகும். (2) "அடிமை செய்வார் திருமாலுக்கே" (6-5-11) ஸ்ரீய:பதிக்கு அடிமை செய்யப் பெறுவர். பெருமாளும் பிராட்டியும் சேரவிருக்க இளைய பெருமாள் அடிமை செய்தாற்போலே விசிஷ்ட வேஷத்திலே அடிமை செய்யப் பெறுவர். "இளைய பெருமாளைப் போலே இருவரு மான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை." "அடிமை தான் ஸித்திப்பதும் ரஸிப்பதும் அச்சேர்த்தியிலே" என்ற முமுக்ஷுப்படி ஸூத்ரங்கள் இங்கேயநுஸந்தேயங்கள். (3) ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்:" (6-7-8) :—வண் டாலே ஆத்த ஸாரமான புஷ்பம் போலே நித்யஸம்ச்லேஷத் தாலே துவண்டிருக்கிற பிராட்டிக்கு நாயகன். ஒண்மலராள் கொழுநன் என்று அவனுக்கு ஏற்றமிருக்கிறபடி. திரு மகளார் தேன்வன் என்னும் பெருமையுடைய பிரானார் என்றபடி. (4) "என் திருமார்வற்கு" (6-8-10) :— என் ஸ்வாமிநியான பெரிய பிராட்டியாரைத் திருமார்விலே உடையவற்கு. (5) "கோலத் திருமா மகளோடுன்னை" (6-9-3) :— மாதாபிதாக்களைச் சேரக் காணுமா போலே. ஒரு மிதுநமிறே ப்ராப்யம். மாதாபிதாக்களையகன்று ப்ரஜை

சேர்ந்த சேர்த்தி பேற்றுக்கு
ஜீவிக்கவற்றே? இருவரும் இப்பாட்டால் அகாரார்த்தத்தை
உறுப்பாயன்றே இருப்பது. பண்ணுகிறார். "அவரக்ஷணே"
ஸக்ரமமாக வ்யாக்யாநம் ஸர்வ ப்ரகாரமாக ரக்ஷிக்க
இறே தாது. ரக்ஷிக்குமிடத்தில் ரக்ஷிக்க வேணும்.
வேணும். அதுதான் ஸர்வ காலமும் ரக்ஷிக்க வேணும். இப்படி
அப்படி ரக்ஷிக்குமிடத்தில் ஸர்வ ரக்ஷகனுக வேணும். இப்படி
வரையாதே ரக்ஷிக்குமிடத்தில் "நகச்சிந்நாபராத்யதி" என்று
மவனும் "என்னடியார் அது செய்யார்" என்றும் அவனும்
கூடவாயிற்று. ஆகையாலே அகாரம் மிதுநத்துக்கு வாசக
மாகிறது. ஞாலந்தாடே இத்யாதியாலே ஸர்வ ப்ரகார
ரக்ஷகத்வம் சொல்லிற்று. சாலப்பலநாள் இத்யாதியாலே
ஸர்வகால ரக்ஷகத்வம் சொல்லிற்று. உயிர்கள் என்
கையாலே ஸர்வ ரக்ஷகத்வம் சொல்லிற்று. காப்பானே
என்று ரக்ஷகத்வம் சொல்லிற்று. "கோலத் திருமா
மகளோடு உன்னைக் கூட" என்கையாலே ஸ்ரீயபதியே
ப்ராப்யம் என்றது. "ஸ்ரீயபத்வம் ஸர்வதோத்கர்ஷாந் உபே
யத்வம் அபூரயத்" என்ற ப்ரமாண வாக்யமநுஸந்தேயம்.
இப்படி ஆறும் பத்தில் ஸ்ரீமத் பதார்த்தத்தை ஆழ்வார்
அருளிச் செய்தார் என்றதாயிற்று. சேஷித்வ ப்ரதிஸம்பந்தி
ஓர் மிதுநயானவோபாதி கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியும் ஓர்
மிதுநம் என்றபடி. மிதுந சேஷத்வம் ஸ்வரூபமானால் மிதுந
கைங்கர்யமிறே ஸ்வரூபாநுரூப ப்ராப்யம் என்றபடி. கட்டி
லும் தொட்டிலும் விடாத தாயைப் போலே அகாரத்த
விவரணங்களில் உண்டான லக்ஷ்மீ ஸம்பந்தத்தை விசத
மாக்குகிற இந்த ஸ்ரீமத் பதம் அடிமையை வளர்க்கைக்குக்
கூடியிருக்கும்படியைக் காட்டுகிறது. "வைகுண்டேது பரே
லோகேச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:" "தயா ஸஹாஸீநம்"
"இத்யாதி ப்ரமாண வாக்யங்களைக் கண்டு கொள்வது.
கைங்கர்யம் தான் சேஷ வஸ்துவுக்கிறே. அந்த சேஷத்வம்
சேஷியை விஷயீகரித்திறேயிருப்பது. சேஷிதான் ஸ்ரீய:
பதியாயிருக்கையாலே கைங்கர்யமும் அவ்வஸ்துவுக்காக
வேணும் என்றபடி. "திருமாலே நானும் உனக்குப் பழவடி

யேன்'' என்று மிதுநம் சேஷி என்ற வோபாதி. ''அடிமை செய்வார் திருமாலுக்கே'' என்று ப்ராப்யமும் மிதுநமாயிறே கூறப்பட்டது இத்தால் சேஷியான ஈச்வரன் ப்ராப்யனுன வோபாதி சேஷிஸ்வருபாந்தர் பூதையான இவளும் ப்ராப்ய பூதை யென்றதாயிற்று. பரமாசார்யரான ஆளவந்தார் ''ப்ரஹர்ஷயந்தம் மஹிஷீம் மஹாபுஜம்'' என்றும் ''ப்ரிய : ப்ரியம்'' என்றும் விசிஷ்டவேஷத்தையருளிச் செய்து ''ஐகாந்திக நித்ய இங்கர : ப்ரஹர்ஷயிஷ்யாமி'' என்ற தத் விஷயமான ஆர்த்தி விசேஷத்தைப் பிரார்த்தித்தார். அவர் திருவுள்ளத்தைப் பின் சென்ற ஸ்ரீபாஷ்யகாரரும் ''ஸ்ரீவல்லப'' என்று விசிஷ்டவேஷத்தை ப்ராப்யமாக அருளிச் செய்தார். ''மாத்ருதேவோபவ'' ''பித்ருதேவோபவ'' என்கிற படியே மாதா பிதாக்களைச் சேர்த்து கிஞ்சித்கரித்தாலிறே புத்ரனுக்கு ஸ்வரூப ஸித்தியுள்ளது. அப்படி ''த்வம் மாதா ஸர்வலோகா நாம் தேவதேவோ ஹரி:பிதா'' என்கிறபடியே நேரே மாதாபிதாக்களாயிருக்கிற பிராட்டியையும் ஈச்வரனை யும் சேரவைத்து கிஞ்சித்கரித்தாலிறே இவனுக்கு ஸ்வரூப ஸித்தியுள்ளது. ஆக மிதுனமே ப்ராப்யம் என்றதாயிற்று. ஆச்ரயண வேளையில் ''ஸுமஜ்ஜாநயே விஷ்ணவே ததாசந'' என்றும் அநுபவ வேளையில் ''ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:'' என்றும் ஸ்ருதிஸம்ருதிகள் கூறுவதையும் ''மிதுநபரம் ப்ராப்ய மேவம் ப்ரஸித்தம்'' என்ற ஸ்ரீபராசபட்டர் திவ்ய ஸூக்தி யையும் குறிக் கொள்ள வேணும். ஆக ஸ்ரீமத் பதார்த்தம் கூறப்பட்டது.

---


## கீதாசார்யன் சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா ரூ. 10

ஆயுள் சந்தா ரூ. 100

ஸ்ரீராமாநுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீ பாஷ்யம்

**தமிழாக்கம்: கூ. சந்தானம்**

## எளிமையான எதிர்வாதம்

பிரம்ம ஞானத்தின் ஆவல் (இச்சை) எந்த நியமங்களால்
உண்டாகிறதோ, அவைகளையே அதன் முன்கூட்டியதாக
கருதப்பட வேண்டுமல்லவா? பிரம்ம ஞானத்தில் ஆவல்
பிறப்பதற்கு தர்ம ஆராய்ச்சி அவசியமில்லை. வேதாந்தத்தைக்
கற்றவனுக்கு கர்மங்களைப் பற்றி முழு அறிவு இல்லாவிடினும்,
வேதாந்த வாக்கியங்களின் ஆராய்ச்சி பொருந்தும். கர்மங்
களின் அங்கங்களாக உத்கீதத்தைப் பற்றிய உபாசனைகள்
(பக்தி விதிகள்) இங்கும் சிந்திக்கப்படுகின்றன. ஆராய்ச்சி
யின்றி அவற்றை அனுஷ்டிக்க முடியாதல்லவா? என்று
கூறினல் நீங்கள் சாரீரக சாஸ்திர ஞானத்தின் தன்மையை
முற்றிலும் அறியாதவர். இந்த சாஸ்திரத்தில் அனுதியான
(ஆரம்பமில்லாத) அவித்யை (மதிமயக்கம்) மூலம் ஏற்படும்
பலவித வேற்றுமை உணர்ச்சிகளின் காரணத்தால் பிறப்பு,
மூப்பு, இறப்பு முதலிய பிறவிச் சுழலான துக்கக் கடலில்
மூழ்கியிருக்கின்றான் மனிதன். அவனுடைய துக்கத்தின் மூல
காரணமான பொய்யை அகற்றுவதற்கு, ஆத்மா ஒன்றே
என்ற பேரறிவு உறுதிப்பட வேண்டும். இதற்கு வேற்றுமை
களைச் சார்ந்த கர்ம ஞானம் எவ்விதம் பிரயோசனப்படும்?
அதற்கு மாறாக நேர் விரோதமாகும். உத்கீதை முதலிய
ஆராய்ச்சிகள் கர்மங்களின் உறுப்புகளாக இருப்பினும் ஒரளவு
ஞானத்தின் சொருபமாக இருப்பதால் இங்கும் ஆராயப்படு
கின்றன. உண்மையில் இவற்றிற்கு நேர்த் தொடர்பு இல்லை.
ஆதலால் எது முக்கியமான சாஸ்திரமோ, அதற்கு அவசிய
மானது அதன் முன்னேடியாக இருக்கும் பொருளைக் கூற
வேண்டும்.

சரி, அந்த முன்னோடி கர்ம ஞானமே, கர்மத்தோடு இணைந்த ஞானத்தால் மோக்ஷம் கூடுவதைக் கூறுகின்றன வேத வாக்கியங்கள்: 5(1) [கர்மங்கள்] அனைத்தும் அவசியமே· யக்ஞம் முதலியன வேதத்தில் கூறப்பட்டதால் குதிரையைப் போல (பி.சூ. III 4.26) கர்மங்களை அறியாவிடின் எவற்றுடன் ஞானம் இணைய`வேண்டும். எவற்றோடு இணையக் கூடாது என்று அறிவது சாத்தியமல்ல ஆதலால் கர்ம ஞானமே முன்னோடி.

இது பொருத்தமான வாதமல்ல. சகலவித வேற்றுமைக் குறிகளையும் தவிர்த்து வெறும் சித் சொரூபமான பிரம்ம ஞானத்தின் மூலமே அவித்யை அழியும். அவித்யையின் அழிவே மோக்ஷமாகும். வர்ணாச்ரமங்களில் வெவ்வேறு உத்தேசங்கள், சாதனங்கள் என்ற கணக்கற்ற கடமைகளின் பலவித கர்மங்கள் எல்லா பேதங்களையும் அகற்றவல்ல பொய் ஞானத்தை அழிக்கும் ஞானத்திற்கு எவ்விதம் சாதனமாகக் கூடும்? வேதங்கள் கர்மங்கள் அநித்திய பலத்தால் மோக்ஷத்திற்கு விரோதிகள் என்றும், ஞானமொன்றே மோக்ஷத்தின் சாதனமென்றும் விளக்குகின்றன.

5(2) இதன் (கர்மத்தின்) பலன் முடிவுள்ளதாகின்றது.

6(1) இந்த கர்மங்களான வாழ்க்கை அழிகிறது. அவ்வாறே மறுமையால் புண்ணியத்தால் உண்டாகும் வாழ்க்கையும் நசிக்கிறது.

6(2) "பிரம்மத்தை அறிந்தவன் பரகதி அடைகிறான்."

6(3) "பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமே ஆகிறான்."

6(4) "அதனையே அடைந்து சாவைக் கடக்கிறான்"

...முதலின.

யக்ஞாதி கர்மங்களைச் சார்ந்திருக்கிறது பிரம்ம வித்தை என்று கூறப்பட்டிருக்கிறதே என்னில் ; அது இலட்சியத்தை விரோதமானதால், வேத வாக்யங்களை நன்கு ஆராய்ந்தால், மனமும் உள்ளமும் அதனால் தூய்மை அடைவதால் ப்ரம்ம ஞானத்தில் ஆவல் பிறக்க உதவுகிறது. அந்த ஆவல் பிறந்த பின் ஞானம் தோன்றுவதற்கு மன அமைதி போன்றவையே நெருங்கிய உபாயங்கள் ஆகின்றன. "சாந்தியும், அடக்கமும், ஆசை ஒறுத்தலும், பொறுமையும், மன உறுதியும் உள்ள வனாகி தன் உள்ளத்திலேயே ஆத்மாவைப் பார்க்க வேண்டும்" என்று வேதம் கூறுகிறது. ஆகவே இவ்விதம் பல பிறப்பு களில் அனுஷ்டித்த பலத்தை விரும்பாமல் செய்த விசேஷ கர்மங்களால் அழுக்கற்று ஞானத்தில் ஆவல் பிறந்ததும் 6(6) "முதலில் சத் ஒன்றே இருந்தது அன்பனே, இரண் டில்லாத ஒன்றே" 6(7) "சத்தியம், ஞானம், அனந்தமே பிரம்மம்" 6(8) "உருப்பில்லாதது, செயல் அற்றது, அமைதியானது" 6(9) "இந்த ஆத்மாவே பிரம்மம்" 6(10) "அதுவே நீயாகிறாய்" முதலிய வாக்கியங்களால் ஏற்படும் ஞானத்தால் அவித்யையின் மறைவு. வாக்கியங் களின் அர்த்தத்தால் ஞானத்தை அடைவதற்கு கேள்வி, சிந்தனை, ஆழ்ந்த தியானம் மூன்றும் உதவுகின்றன.

(வளரும்)

## ஆயுள் சந்தா அளித்தவர்கள்

26. G. ஆளவந்தார், சென்னை-3.
27. M. S ராமாநுஜம், சென்னை 4.
28. G. ராதாகிருஷ்ணன், சென்னை-45.
29. T. C. A ராமாநுஜம், டெல்லி-57.
30. P. T. திருமலை ஐயங்கார், சென்னை-44.
31. J. ஜலஜாக்ஷி, சென்னை-10.
32. N. C. கோபாலஸ்வாமி, சென்னை-44.
33. N ரங்கராஜன், கல்கத்தா-29
34. P. S. ராமகிருஷ்ணன், கல்கத்தா-26.
35. Dr. T. V. S. கிருஷ்ணன், கல்கத்தா-26.
36. M. கோவிந்த ராஜுலு, வேலூர்-6.

ஸ்ரீ:

# ஆசார்ய தேவோ பவ

**V. பிரேமாவரதன்**

வரதராஜப் பெருமாளின் பிரேம்மோத்ஸவத் திருவிழா. வீதிகளெங்கும் அலங்காரம் செய்யப்பட்டு காஞ்சி மாநகரமே இந்திரலோகமாக காட்சி தந்தது.

இன்னும் சற்று நேரத்தில் பேரருளாளன் திருவீதிப் புறப்பாடு தொடங்கிவிடுவார்கள் ஆஹா அந்தக் காட்சி தான் எத்தனை அழகு! என்ன கம்பீரம். ராஜவீதியின் வளைவுகளில் அழகிய வண்ணச் சரங்கள், கோயில் மணியின் கண கண ஒலி கேட்கிறது. ரிஷபத்தில் உட்கார்ந்திருக்கும் பையன் தகராவை தட்டிக் கொண்டு வருகிருன். கிணிங், கிணிங் என்று யானை கம்பீரமாக நடந்து தன் துதிக்கையால் ஆசிர்வதித்தபடி அசைந்து அசைந்து வருகிறது. முன்னுல் வண்டியில் முரசுக் கொட்டிவரும் முண்டாசுக்காரனைத் தொடர்ந்த ரிஷபமும், அதைத் தொடர்ந்த யானையும், அதைத் தொடர்ந்த குதிரை வீரனும், கொடிகள் ஏந்திய வாலிபர்களும், புறப்பாட்டிற்குக் கட்டியம் கூறிக் கொண்டு நகர்ந்தது கண்கொள்ளா காட்சியாக அந்த உலா இருந்தது.

முன்னே தொடர்ந்த திவ்யப் பிரபந்த கோஷ்டியின் குரல் வளைவுகளும் ஆழ்ந்த அர்த்தம் தொனிக்கும் நயமான தமிழ்ப் பாடல்கள் இசைபட தெய்வீகமாக இருந்தன.

இதைத் தொடர்ந்த நாதஸ்வர இசையும், அதை வாசித்து வரும் நாதஸ்வர வித்வானின் ஸ்வர ஜதிகளும் அடடா என்ன சுகம்! என்ன சுகம்! இசைக்கு இத்தனை இரக்கமும், கருணையும், உல்லாசமும் எப்படி வந்தது. இதை

கண்டு பிடித்தவர் தாம் யார்? தெய்வ வழிபாட்டிற்கு இசையை பிரதானமாக வைத்த அந்த உத்தமர் தம் உறவு நமக்கு வேண்டியதே! இப்படிப்பட்ட இசையை அனுபவித்த மங்கை மன்னனும் "ஏழ் இசையாய், இசைப் பயனாய்" என்று எம்பெருமானை அழைத்து அனுபவித்திருக்கிறார் அன்றோ! காஞ்சிமா நகரம் புதுப் பொலிவுடனும் கலை நயத்துடனும், இசை ஞானத்துடனும் திகழ்ந்ததால்தான் "நகரேஷு காஞ்சி" என்றார்களோ? எல்லாவற்றையும் ஒருங்கே தன்னுள் அமைத்துக் கொண்டு வட்டமாக நின்றதினால்தான் மேகலைக் குச் சமமாக ஒப்பிட்டார்களோ?

ஒரு நாள், வேளைக் கொரு வாகனம், விதத்திற்கோர் அலங்காரனாய் வரதராஜன் உலாவரும் இந்த சூழ்நிலையில் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நம்மிடையே பரப் நமக் காகவே ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபத்தைப் பண்ணி நம்மை உஜ்ஜீவிக்கப் பண்ணிய நம் எம்பெருமானார் காஞ்சிபுரத்தில் வசித்து வந்த சமயம் அது!

எம்பெருமானாருக்கு எத்தனையோ சிஷ்யர்கள். ஒவ் வொருத்தரும் ஒவ்வொரு விதத்தில் ஆச்சாரியனுக்கு தொண்டு செய்து பக்தி பூர்வமாக தங்களை அர்பணித்துக் கொண்டவர்கள். இதிலே வடுகநம்பி சிலாக்கியமானவர். ஏதனால் என்றால், ஏற்றம் என்பது கொடுத்து வருவது அல்ல! தானாகவே வரவேண்டும். அதுதான் உயர்வு.

சிஷ்யாச்சார்ய முறை என்று வரும்போது, ஆசார்யனை பகவானாகவே நினைத்து, அவர் வேறு, இவர் வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாத ஓர் அபூர்வமான நிலையில் தன் உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் ஆசார்யன் ஆசார் யன் என்றே அர்பணித்த சிஷ்யர்களுள் வடுகநம்பி தலைசிறந்த வர். சதா எம்பெருமானாருக்கு கைங்கர்யம் செய்து அந்த கைங்கர்யத்திலேயே சுகம் கண்டவர். ஸ்வாமிக்கு உகப்பான தளிகைகள் செய்து திருமடைப் பள்ளி கைங்கர்யத்தை இடைவிடாமல் செய்து வந்தவர்.

வடுகநம்பி இரவு எம்பெருமானுர் பருகுவதற்காக பால் காய்ச்சிக் கொண்டிருந்தார். இரவில் எம்பெருமானுர் பால் அருந்திய பின்தான் உறங்கச் செல்வார். வாசலில் வந்து கொண்டிருந்த வரதனின் புறப்பாடும், அதை ஒட்டிய பல வேடிக்கை விநோதங்களும் அவரைக் கவரவில்லை. ஒரே சிந்தனை, ஒரே எண்ணம். எம்பெருமானுர் பருக பால் காய்ச்சி வைக்க வேண்டும். அது பொங்கி அடுப்பில் வழிந்துவிட்டால் இரவு எம்பெருமானுருக்கு பால் இல்லாமல் போய்விடுமே என்ற கவலை. அதனுல் மற்ற எதுவுமே அவருக்கு கேட்கவும் இல்லை. பெருமாள் புறப்பாட்டிற்குப் போகவும் இல்லை.

பிறகு உள்ளே வந்த எம்பெருமானுர் "வடுகா! நீ ஏன் பெருமாளை சேவிக்க வரவில்லை?" என்று கேட்டார். உடனே வடுகநம்பி "அடியேன், தேவரீருடைய பெருமாளை சேவிக்க வந்தால், அடியேனுடைய பெருமாளுக்காகக் காய்ச்சிக் கொண்டிருக்கும் பாலமுது பொங்கிவிடுமே! எனவே வரவில்லை என்ருர். அவர் 'அடியேனுடைய பெருமாள்' என்று குறிப்பிட்டது எம்பெருமானுரையே! இப்படித் தம் ஆசாரியருக்காக பகவானையும் சேவிக்க மறுத்த வடுகநம்பியே சிஷ்யர்களில் தலைசிறந்தவர்.

ஆசாரியனைச் சேவித்தாலே போதும், பகவானை அடைந்து விடலாம்; அவனது திருவடி நமக்குக் கிட்டிவிடும். இதுதான் நம் சம்ப்ரதாயக் கொள்கை. வேதத்திலகூட .மாத்ரு தேவோ, பவ. பித்ரு தேவோ பவ. ஆசார்ய தேவோ பவ என்று தாய்க்கும் தந்தைக்கும் அடுத்தபடியாக ஆசாரியனைக் கூறி இருக்கிறது. ஆகவே நமக்கு 'ஆசார்ய பக்தி அவசியம் வேண்டும். அதோடு அவர் கடாக்ஷமும் வேண்டும்.

---

இந்நிகழ்ச்சி ஸ்ரீரங்கத்தில் நடந்ததாக சம்ப்ரதாயப் புத்தகங்களில் உள்ளது. —(ஆ—ர்).

# ஸ்ரீபாஷ்ய ஸாரம்

(முன் தொடர்ச்சி)

உலகில் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேணுமானால் லக்ஷணத்தை முன்னிட்டே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படியே பரப்ரஹ்மத்தைத் தெரிந்துகொள்ள வேணுமானாலும் ஒரு லக்ஷணத்தை முன்னிட்டே தெரிந்து கொள்ள வேண்டும். நாம் கண்ணால் காணக்கூடிய பொருள்களுக்கே லக்ஷணம் கூறமுடியுமேயல்லது கண்ணுக்குப் புலப்படாத பொருளுக்கு லக்ஷணம் கூறமுடியாது. பரப்ரஹ்மமோ கண்ணுக்குப் புலப்படாததேயன்றிப் புலப்படுமதன்று. ஆகவே அதற்கு ஒரு லக்ஷணம் கூற இயலாதபோது அது தெரிந்து கொள்ள முடியாதென்று தேறிவிட்டபடியால் அந்த பரப்ரஹ்மத்தைப் பற்றின விசாரம் எப்படி செய்ய ப்ராப்த

P.B. அண்ணங்கராசாரியர்

மாகும்? என்று ஆக்ஷேபம் தோன்ற, அவ்வாக்ஷேபத்தைப் பரிஹரிக்க இந்த அதிகரணம் எழுகின்றது. **இவ்வதிகரணத்தின் ஸூத்ரம் "ஜந்மாத்யஸ்ய யத:" என்பது ஜந்மாதி, அஸ்ய, யத:** என்று மூன்று பதமாகவுள்ளது இந்த ஸூத்ரம். **அஸ்ய**—கண்ணால் காணப்படுகிற இந்த சேதந மிச்ரமான பிரபஞ்சத்திற்கு, ஜந்மாதி—உற்பத்தி ஸ்திதி ப்ரளயங்கள், **யத:**—எந்த வஸ்துவினிடத்திலின்று ஆகின்றனவோ, [அது தான் பரப்ரஹ்மம்] என்பதாக ஸூத்திரத்தின் பொருள். தைத்திரீயோபநிஷத்தில் ப்ருகுவல்லியென்னும் ப்ரகரணத்திலுள்ளதான '**யதோவா இமாநி பூதாநி ஜாயந்தே. யேந ஜாதாநி ஜீவந்தி. யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி. தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்மேதி**" என்னும் வாக்கியமானது பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வரூபமான லக்ஷணத்தைச் சொல்லியிருக்கின்றது. உலகில் நாம் ஆடு மாடுகளுக்கு ஒவ்வொரு லக்ஷணத்தைக் கொண்டு இதர பேதத்தை எப்படி

நிச்சயிக்கிறோமோ அப்படியே ப்ரஹ்மம் கண்ணுக்குப் புலப் படாததாயிருந்தாலுங்கூட ஜகஜ்ஜந்மாதி காரணத்வ ரூப மான லக்ஷணத்தைக் கொண்டு சேதநா சேதநங்களிற் காட்டில் வேறுபட்டதென்று நிச்சயிக்க முடியுமாதலால் அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தைப் பற்றின விசாரம் கூடும் என்ற தாயிற்று.

**இங்கே பூர்வபக்ஷம் :**—ப்ரஹ்மத்திற்கு ஜந்ம காரணத்வம் முதலானவை லக்ஷணமாக ஸம்பவிக்கமாட்டாதென்று பூர்வ பக்ஷம் ப்ராப்தமாகிறது. "**யத: இமாநி ஜாயந்தே**" இத்யாதி யாக எடுத்துக்காட்டின உபநிஷத் வாக்யத்தில் அந்வய க்ரமம் எப்படிக் காணவேணுமென்றால், "**யத: இமாநி பூதாநி ஜாயந்தே தத் ப்ரஹ்ம; யேந ஜாதாநி ஜீவந்தி தத் ப்ரஹ்ம; யத் ப்ரயந்தி அபிஸம்விசந்தி தத் ப்ரஹ்ம**" என்று மூன்று வாக்யங்களாகப் பிரித்து அந்வயங் கொண்டு ஜந்மகாரணத் வம் ஒரு லக்ஷணமென்றும் ஸ்திதி காரணத்தவம் மற்றொரு லக்ஷணமென்றும் லயகாரணத்வம் வேறொரு லக்ஷணமென்றும் ஆக வ்யாவர்த்தக லக்ஷணங்கள் மூன்று அங்கீகரிக்க வேண்டி யதாகின்றது. இப்படி யாகுமளவில், ஒரே ப்ரஹ்மம் என்றல் லாமல் பல ப்ரஹ்மங்கள் என்பதாகத்தேறும், வ்யாவர்த்தகங் கள் பலவானால் வ்யாவர்த்யமும் பலவாக வேண்டுகையாலே.

இப்படி யொரு நிர்ப்பந்த முண்டோ? தேவதத்தன் கறுத்தவனாயும் பருத்தவனாயும் யுவாவாயும் செந்தாமரைக் கண்ணனாயு மிரா நின்றான் என்று ஒருவர் சொன்னால் கறுப்பு முதலிய வ்யாவர்த்தகங்கள் பலவாயிருப்பது கொண்டு வ்யா வர்த்யனான தேவதத்தனும் பல வ்யக்திகளாகத் தேறிவிடு வானோ? பரத்யக்ஷமாக ஒரு தேவதத்தனையே நாம் காண் கிறோம். அவ்வொரு வ்யக்தியினிடத்தில் கருமை, பருமை முதலான பலவும் கூடியிருக்கக்காண்கிறோம். இதுபோல ஒரு ப்ரஹ்மத்தினிடத்திலே ஜந்மகாரணத்வம் முதலானவை பல வும் கூடியிருக்கக் குறையில்லையே. இவற்றால் ப்ரஹ்ம வ்யக்தி யில் பஹுத்வத்தை எப்படி ஆபத்தி பண்ண முடியும்? என்று

மத்யே சங்கை தோன்றும். இதற்கு ஸமாதானம். கருமை பருமை முதலிய பலவற்றால் தேவதத்த வ்யக்தியில் பன்மை வந்துவிட மாட்டாதென்பது வாஸ்தவமே. தேவதத்தன் கண்ணுக்குப் புலப்படுமவனாதலால் அவ்விஷயம் வேறு. ப்ரஹ்மம் அப்படி ப்ரத்யக்ஷமன்றே அதுவோ அப்ரத்யக்ஷமாயிரா நின்றது. ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் ஒன்றிலேயே கூடுமென்று க்ரஹிப்பிக்கவல்ல பிரமாண மேதுவும் புலப்படவில்லை லக்ஷணங்கள் எல்லாம் இதர பேதத்தை ஸாதித்துக் கொடுக்குமவை என்பது உத்ஸர்க்கத: ப்ராப்தமாயிரா நின்றது. ஜந்ம காரணத்வம் ஸ்திதி காரணத்வம் லய காரணத்வமென்னு மிந்த லக்ஷணங்கள் இதர பேதத்தை [வ்யாவ்ருத்தியை] ஸாதித்துக் கொடுக்குமளவில் இதற்கு அபவாதம் யாதொன்று மில்லாமையினாலே, ஜந்மகாரணத்வமாகிற லக்ஷணமானது என்ன செய்யுமென்றால், தன்னைக் கொண்டு லக்ஷணீயமான ப்ரஹ்மத்திற்கு ஸ்திதி காரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் லயகாரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். இப்படியே ஸ்திதி காரணத்வரூபமான லக்ஷணமும் ஸ்வலக்ஷ்யமான ப்ரஹ்மத்திற்கு-ஜந்மகாரண பூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் லயகாரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் வேறு பாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும் இப்படியே லய காரணத்வ ரூபமான லக்ஷணமும் ஸ்வலக்ஷ்யமான ப்ரஹ்மத்திற்கு ஜந்மகாரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் ஸ்திதி காரணபூதமான ப்ரஹ்மத்திற்காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். ஆகவிப்படி லக்ஷண பேதங்களினால் ப்ரஹ்ம பஹுத்வம் தேறியே தீரும். இதற்காகப் பல லக்ஷணங்களைக் கொள்ளாமல் "ஜந்மகாரணத்வே ஸதி ஸ்திதி காரணத்வே ஸதி லய காரணத்வம் ப்ரஹ்ம லக்ஷணம்" என்று கொள்ளுகிறோமெனில்; இவற்றுள் ஒவ்வொன்றே லக்ஷணமாகப் போருமாதலால் மற்ற விசேஷணங்கள் வ்யர்த்தமாக வேண்டி வரும். மேலும் ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் விருத்தங்களாகையாலே ஓரிடத்தில் இவை கூடியிருக்கவும் மாட்டா.

# தென்கலை-வடகலைச் சர்ச்சைகள்...

(வக்கீல் V. N. வெங்கட வரதாசாரியாருடன் ஒரு பேட்டி)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கே: வடகலையாருக்கும் தென்கலையாருக்கும் அப்படி வழக்குகள் ஏற்படக் காரணம் என்ன?

ப: தென்கலையாருக்கும் வடகலையாருக்கும் இடையில் வித்யாசங்கள் நாலுபடியாக வளர்ந்திருக்கின்றன என்பது என்னுடைய கருத்து

(1) முதன்முதலில் தென்கலை வடகலை என்பது மொழி வித்யாசமாக மட்டும் இருந்தது.

(2) இரண்டாவதாக வடமொழிக்கு முக்யத்வம் அளிப்பவர் என்றும் ஆழ்வார் அருளிச் செயல்களுக்கு (தென் மொழிக்கு) முக்யத்வம் அளிப்பவர்கள் என்றும் இரு பிரிவின ராகினர். ஆயினும், இவ்விருவரும் சச்சரவுகளில் ஈடுபடாமல் இருவருமே உபய வேதாந்த ப்ரவர்த்தகர்களாகவே இருந் தனர் வேதாந்த தேசிகரும் தொண்டை மண்டல வேதியர் வாழவே தூய தென்மறை வல்லவர் வாழவே என்று பாடி யிருக்கிறார்.

(3) ஸ்ரீராமானுஜர் கோயில்களில் திவ்யப்பிரபந்தங் களுக்கு முக்யத்வம் அளித்தபோது, வடமொழிக்கு முக்யத்வ மளித்தவர்கள் அதை விரும்பவில்லை, அவர்கள் கோயில் நிகழ்ச்சிகளில் அதிக அக்கரை காட்டாமலே இருந்து விட்டனர். பின்னர் அவர்களும் மனம் மாறி கோயில் உத்ஸ வங்களில் கலந்துகொள்ள முற்பட்டபோது ஏற்கனவே இருந்த அபிப்ராய பேதங்கள் வளர்ந்தன.

(4) கடைசியாக இச்சச்சரவுகள் வழக்குகள் வரை வளர்ந்து விட்டன.

கே: இவர்களுக்குள் ஏற்பட்ட வழக்குகள் எதை அடிப் படையாகக் கொண்டவை?

ப: இவை முக்கியமாக பாத்திரச் சண்டை, நாமச் சண்டை என இருவகைப்படும். திவ்யப்ரபந்த ஸேவா காலம் தொடங்கும் போது ஸ்ரீமணவாள மாமுனிகளின் தனியனான ஸ்ரீசைலேசதயா பாத்ரம் என்ற சுலோகத்தைச் சொல்லி ஆரம்பித்தல் தென்கலையாருடைய கட்சி. ஸ்ரீ வேதாந்த தேசிகருடைய தனியனான ராமாநுஜ தயாபாத்ரம் என்ற சுலோகத்தைச் சொல்லி ஆரம்பிக்க வேண்டுமென்பது வடகலையாருடைய கட்சி. இந்த இரண்டில் எது முற்பட்டது என்பதில் பல கோயில்களில் வழக்குகள் நடந்தன. இவை பாத்திரச் சண்டை எனப்பட்டன. தவிர, தென்கலையாருக் கென்று ஒரு திருமணும் வடகலையாருக்கென்று ஒரு திருமணும் தற்போது இருக்கின்றது. இவற்றில் எந்தத் திருமணை கோயில்களில் சாற்றுவது என்று பல வழக்குகள் நடந்திருக் கின்றன. சமீபத்தில் பரபரப்பாக நடைபெற்ற யானைத் திரு மண் கேஸ் இத்தகைய வழக்குகளில் ஒன்றாகும். முக்கியமாக பாஷைப் பிரச்னைகளும் கொள்கை விவாதங்களும் மாறி இந்த நாமச்சண்டை பாத்திரச்சண்டையில் வந்து நின்று விட்டன. மற்ற எல்லாச் சச்சரவுகளும் இதற்குள் அடக்கம்தான்.

கே: முதன் முதலில் சச்சரவு ஏற்பட்டது 1711ல் என்று கூறினீர்களே. அது என்ன என்று கூறமுடியுமா?

ப: வடகலை தென்கலை விவகாரங்களுக்கு முதலில் ரிகார்டு ஏற்பட்டது கி. பி. 1711ல் தான். அந்த ரிகார்டு "ஆத்தான் ஜீயர் உடன்படிக்கை" எனப்படுகிறது. காஞ்சி புரம் ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோயிலில் தாதாசாரியர்கள் ஸேவை தொடங்கும் மிராசைக் குறிக்கிறது இவ்வுடன் படிக்கை. "ஏற்கனவே இக்கோயில் வழக்கத்திலிருக்கும் ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தனியனையே ஸேவித்து ஸேவையைத்

தொடங்குகிறோம்'' என்று அவ்வுடன்படிக்கையில் தாதா சாரியார் தலைவர் ஆத்தான் ஜீயருக்கு எழுதிக் கொடுத்திருக் கின்றார். இதுதான் முதன் முதலில் தென்கலையாருக்கும் வட கலையாருக்கும் இடையில் எழுத்து மூலம் ஏற்பட்ட ரிகார் டாகும். இதைப் போன்று இத்தனியனைக் குறிக்கும் பல ரிகார்டுகள் தொடர்ந்து திருப்பதியிலும் ஸ்ரீரங்கத்திலும் ஏற் பட்டிருக்கின்றன.

**கே : இந்தத் தனியன் கேஸில் எது சரியான அபிப்ராயம் என்று நினைக்கிறீர்கள் ?**

ப : ஒரு கோயிலில் நடைபெறும் சர்ச்சைகளுக்கு அக் கோயில்களின் வழக்கங்களே (usage) சாட்சியாக முடியும். காஞ்சிபுரத்தில் 1711ம் வருடத்திய ரிகார்டும், திருப்பதியின் 1737ம் வருடத்திய ரிகார்டும், ஸ்ரீரங்கத்தின் 1792ம் வருடத்திய ரிகார்டும் **''ஏற்கனவே இக்கோயில் வழக்கத்தில் இருந்துவரும் ஸ்ரீசைலேச தயாபாத்ரம்** என்று குறிப்பிடுவதால் அந்தத் தனியனே கோயில் வழக்கத்திலிருந்திருக்கிறது என்று தெளிவாகிறது. இது நீதிமன்றங்களும் தீர்மானித்த விஷய மாகும். நான் தென்கலையார் வக்கீலானபடியால் இவ்வாறு சொல்லுகிறேன் என்று நினைக்க வேண்டாம். என்னுடைய கருத்தை ஆதாரத்தோடு மறுத்தால் ஏற்றுக்கொள்ளச் சித்த மாயிருக்கிறேன்.

**கே : இதுவரை தனியன் வழக்குகள் பற்றிக் கூறினீர்கள். இனி திருமண்வழக்குகள் பற்றிச் சில கூறமுடியுமா ? முதன் முதலில் இந்த இரண்டு விதமான திருமண்கள் எப்படி எப்போது ஏற்பட்டன ?**

ப : இரண்டு திருமண்கள் எப்போது ஏற்பட்டன என்பதற்கு கோர்ட்டு ரிகார்டுகள் ஒன்றும் கிடையாது. அது ஸம்ப்ரதாய அல்லது சரித்திர ஆராய்ச்சிக்கு உட்பட்ட விஷயமாகும். ஆனால் கி. பி. 1827ல் செங்கல்பட்டு கலெக்டர்

வைவாஷ் என்பவர் காஞ்சிபுரம் கோயிலில் உள்ள நாமங் களுக்கு ஒரு லிஸ்ட் தயார் செய்தார். அவர் கோயிலில் 75 திருமண்கள் உள்ளதாகவும் அவை அனைத்தும் தென்கலைத் திருமண்களே என்றும் கூறியிருக்கிறார். இதுதான் முதன் முதலில் நாமங்களை தென்கலை—வடகலை என்று இருபிரிவாகக் குறிப்பிட்டதற்கான முதல் ரிகார்டாகும். எனக்குத் தெரிந்த வரையில் இதற்கு முற்பட்ட ரிகார்டுகள் ஒன்றும் கிடையாது. ஸ்ரீரங்கத்தில் இதே மாதிரி லிஸ்ட் எடுத்தது 1863ல்.

**கே : ஆக மூன்று நூற்றாண்டுகளாக நம் ஸ்ரீவைஷ்ணவர் களுக்குள் இப்படி ஒரு சர்ச்சை அவசியம்தானா ?**

ப : ஒரு கோயிலில் நடைபெறும் தென்கலை வடகலை வழக்குகளைப் பற்றி விவாதிப்பதற்கு முன் அதன் பின்னணியை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தென்கலை வடகலை இந்த இரண்டினுள் அந்தக் கோயிலில் பின்பற்றப்படுவது எந்த ஒன்று என்பதே வழக்கு. அந்தக் கோயிலில் சேவிக்கப்படும் சுலோகங்கள் அல்லது அந்தக் கோயிலின் திருமண்கள் இவையிரண்டே அதை நிர்ணயிக்க முடியும். இவற்றைத் தெரிந்து கொள்வதற்கு அந்தக் கோயில்களின் வழக்கங்களே (usage) ஆதாரமாக இருக்கும். எனவே ஒரு கோவிலின் வழக்கத்தைப் பற்றிய வழக்காகவே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட வழக்கம் மாறினால் அல்லது மாற்றப்பட்டால் அதை எதிர்த்துப் போடப்படும் வழக்குகளே இவை. இதையேதான் ப்ரிவி கௌன்சில் தீர்ப்புகளும் கூறு கின்றன.

**கே : தற்போது நடக்கும் வழக்குகள் பற்றி ஏதாவது ....?**

ப : தற்போது குறிப்பிடத்தக்க வகையில் சில வழக்குகளே நடைபெற்று வருகின்றன. (அதாவது தென்கலை வடகலை வழக்குகளை மட்டும் நான் குறிப்பிடுகிறேன்).

ஸ்ரீரங்கத்தில் தேசிகர் ஸன்னிதி விவகாரம், திருமலையில் அத்யயனஉத்ஸவ விவகாரம், காஞ்சீபுரத்தில் யானை நாம விவகாரம் போன்றவை, திருநாராயணபுரம் விவகாரம் ஆகியவையே.

**கே : காலத்தின் நிலையை ஒட்டி இனிமேல் கோயில்களில் தென்கலை வடகலை சர்ச்சைகளே வராமலிருப்பதற்கும் மூக்யமாக கோர்ட்டு மூலமாக விவகாரங்கள் ஏற்படாமலிருப்பதற்கும் தாங்கள் கூறும் யோசனை என்ன ?**

ப : தென்கலையார், வடகலையார் இருவரும் அவரவர்கள் அநுஷ்டானங்களை கடைபிடிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். மற்ற வகுப்பின் வழக்கங்களில் தலையிட்டு மாற்ற எண்ணக் கூடாது. கோவிலின் பழைய வழக்கங்களை எந்த விதத்திலும் மாற்ற முற்படக் கூடாது. நான் முன்பே கூறியபடி இருவரும் உபய வேதாந்திகள், ராமாநுஜ தரிசனத்தவர். புதியன புகுத்தப்படும் போதுதான் வழக்குகள் ஆரம்பிக்கப்படுகின்றன. தற்போது நடைபெறும் வழக்குகள் அனைத்தும் அந்தந்தக் கோயிலின் வழக்கத்தைப் பற்றி எழுந்த வழக்குகளே. அவைகளை நீதிமன்றங்களே நிர்மானிக்கட்டும். அல்லது இருவரும் மத்யஸ்தமாக தங்களுக்குள் தீர்த்துக் கொள்ளலாம். ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் வழக்கங்களை மாற்றாமல், புதிதாக சர்ச்சைகள் ஏற்படுத்தாமல் இருப்பதே வடகலை தென்கலை வழக்குகள் ஏற்படாமலிருக்க வழி. ஆனால் ஏற்கனவே நிர்மானமாகாத வழக்கு (Pending cases)களை ஒருவகையில் முடித்துத்தானே ஆக வேண்டும்.

**கே : இவ்வளவு தெளிவாக விஷயங்களைக் கூற தங்களுக்கு ஸம்ப்ரதாய ஞானம் மிகவும் அவசியம். அத்தகைய ஞானம் தங்களுக்கு ஏற்படக் காரணமாயிருந்தவர் யார் ?**

ப: ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் பெருமாள் கோயில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் ஸ்வாமியே! இந்தத் தென்கலை வடகலைச் சர்ச்சைகளில் ஸம்ப்ரதாய ரீதியாக ஆராய்ந்து சொல்லக்கூடியவர் அவரைத் தவிர வேறு யாரும் இல்லை. அவரை நான் மணவாள மாமுனிகளின் மறு அவதாரமாகவே நினைக்கிறேன். அவரளவுக்கு நமது ஸ்ரீவைஷ்ணவ-விசிஷ்டாத்வைதக் கொள்கைகளைப் பரப்பியவர் இவ்வுலகில் யாருமே கிடையாது. வேதாந்த தேசிக கிரந்தங்கள் பூராவையும் ஆழ்ந்த ஆதரத்துடன் வாசித்து முதலில் வெளியிட்டவர் இவரே. ராமாநுஜ, லோகாசார்ய, மணவாளமாமுனிகள் கிரந்தங்களையும் அதே மாதிரி அதிகரித்து வெளியிட்டிருக்கிறார். 80 வருடகாலம் ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு உழைத்து பிரவசனம் செய்யும் பாக்யம் இதற்குமுன் சில ஆசாரியர்களுக்கே கிட்டியிருக்கிறது. ஆழ்வார்கள், நாதமுனிகள் தொடங்கி மணவாள மாமுனிகளீறுவுள்ள பூர்வாசாரியர்கள், வேதாந்த தேசிகர்—எல்லாருடைய ஞானத்தையும் திரட்டி தம்மிடம் தேக்கிக் கொண்டு கைங்கர்ய ஸ்ரீயுடன் சேர்ந்து விளங்குகிற ஆசாரியர் இவர் என்பது என்னுடைய துணிவான முடிவு.

பல வருடங்களாக அவர் எழுதி வரும் தென்கலை, வடகலை வித்தியாச ஆராய்ச்சிப் பிரசுரங்களை நான் கூர்ந்து படித்திருக்கிறேன். அவருடைய ஆராய்ச்சி நிர்ணயங்களெல்லாம் வழக்குகளில் நான் கண்ட ரிகார்டுகளை முற்றிலும் ஒட்டியே இருக்கின்றன. ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி மணவாள மாமுனிகளீறாகவுள்ள வேதாந்த தேசிகர் உள்பட்ட எல்லா பூர்வாசாரியர்களும் ஒருமனப்பட்டவர்களே. தேசிகரை தனி வழிவகுத்தவராக நினைப்பது தவறு என்று அழகாக நிரூபித்திருக்கிறார். அவருடைய காலத்தில் நாமெல்லாம் வாழ்வதும், அவருடன் தொடர்பு கொண்டிருப்பதும் நம் பெரும் பாக்கியம்.

**கே: கீதாசார்யன் பத்ரிகையைப் பற்றித் தங்களுடைய அபிப்ராயம் என்ன ?**

**ப:** சென்ற ஒருவருட காலமாக நான் கீதாசார்யனைத் தொடர்ந்து வாசித்து வருகிறேன். எளிய தமிழில் நம் சம்ப்ரதாயத்தைப் பரப்ப இப்படி ஒரு பத்ரிகை இத்தனை நாள் இல்லாதிருந்தது பெரும் குறையே என்று உணர்ந்தேன். பத்ரிகையைப் படிக்கும்போதே மகிழ்ச்சியாக இருக்கிறது. அதுவும் கீதாசார்யன் இளைஞர்களால் நடத்தப்படும் பத்ரிகை என்று கேள்விப்பட்டவுடன் எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது. உங்களுக்கு நான் கூறும் அறிவுரையெல்லாம் இதுதான்: தெரிந்தோ தெரியாமலோ நமக்குள் இருபிரிவுகள் ஏற்பட்டுவிட்டன. இதன் காரணத்தை அறிந்து கொள்வதில் தவறில்லைதான். ஆனால் நீங்கள் அச்சச்சரவுகளை வளர்க்க முயலாமல் உங்கள் பத்ரிகைமூலம் இருகலையாரின் ஒற்றுமைக்குப் பாடுபடுங்கள். அதுவே நமது சம்ப்ரதாயம் வளரவழி.

பேட்டி: V. P நரஸிம்மன்



# நூற்றெட்டுத் திருப்பதிகள்

## தீபம் நா. பார்த்தசாரதி

ஸ்ரீ வைஷ்ணவ திவ்யதேசங்கள் எவை எவை என்று இந்தத் தலைமுறையைச் சேர்ந்த இளைஞர்கள் பலருக்குத் தெரியாது. நூற்றெட்டு ஊர்கள் என்ற மொத்த எண்ணிக்கையே தெரியாதபோது அந்த ஊர்களின் பெயர்களைச் சொல்லுமாறு கேட்பதோ அறவே இயலாத காரியமாகிவிடும். ஆழ்வாராசாரியர்களில் யார் யார் எதை எதை மங்களாசாஸனம் செய்துள்ளார்கள் என்று கேட்டாலோ அறவே தெரிந்திருக்காது. அஷ்டப் பிரபந்தத்தில் ஒன்றாகிய நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியை எத்தனைபேர் படித்திருப்பார்கள் என்பதே சந்தேகம்தான். ஏனென்றால் அது பிரபலமாக்கப்பட யாரும் முயற்சி எடுக்கவில்லை.

இங்கே நமது மத்திய மாநில அரசாங்கங்களின் சுற்றுலாப் பிரிவு (Department of tourism) களும் சிம்லா, நைனிதால், உதகமண்டலம், கோடைக்கானல் ஆகிய மலைவாசஸ்தலங்களுக்குச் செய்கிற விளம்பரங்களைக்கூட ஆன்மீகத் திருத்தலங்களுக்குச் செய்வதில்லை. லௌகிகம் விளம்பரம் பெறுகிறது. ஆன்மீகமோ வைதிகமோ விளம்பரம் பெறுவதில்லை.

ஐரோப்பாவில், இங்கிலாந்திலும், ரோமிலும்கூட காண்டர்பரி, வெஸ்ட்மின்ஸ்டர், வாடிகன் ஆகிய புனித தேவாலயங்களுக்கும், அவை அமைந்திருக்கும் நகரங்களுக்கும் அரசாங்கம் பிரமாதமான விளம்பரம் செய்கிறது. இந்தியாவில் திருப்பதி தேவஸ்தானத்துக்கு ஆந்திர அரசு செய்யும் விளம்பரத்தைத் தவிர வேறெந்த திவ்ய தேசத்துக்கும் விளம்பரம் செய்யப்படுவதில்லை. சுகவாசஸ்தலங்களுக்கு அளவுமீறி விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. உண்மையான சுகவாசஸ்தலம் திவ்ய தேசங்களே.

தென்பாண்டி நாட்டுத் திருப்பதிகள், சோழ நாட்டுத் திருப்பதிகள், சேரநாட்டுத் திருப்பதிகள், நடுநாட்டுத் திருப்பதிகள், வடநாட்டுத் திருப்பதிகள், எனப் பிரிவுகளை உடைய

ஸ்ரீவைஷ்ணவ க்ஷேத்திரங்களைப் பற்றித் தனித் தனியே படங்களோடு துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவது அரசாங்கச் சுற்றுலாத் துறையின் கடமை. சுற்றுலாத்துறை அதை அவசியம் செய்ய வேண்டும்.

காலஞ் சென்ற சி என். அண்ணாதுரையின் சமாதியையும் வள்ளுவர் கோட்டத்தையும் கூடச் சுற்றுலாத் துறையினர் அக்கறையோடு விளம்பரப் படுத்தும் அதே சமயம் காஞ்சி புரம் வரதராஜப் பெருமாள் கோவிலையும், ஸ்ரீரங்கநாத ஸ்வாமி கோவிலையும், திருவெள்ளறையையும், திருக்கண்ண புரத்தையும் ஏன் விளம்பரப் படுத்தக் கூடாது என்பதுதான் இங்கே நான் கேட்க விரும்பும் கேள்வி. இந்து அற நிலையப் பாதுகாப்புத் துறையும் இதை எல்லாம் கவனிப்பதாகத் தெரியவில்லை. இப்படியே விட்டுவிட்டால் மங்களாசாஸனம் செய்த பாடல்கள், ஸ்தலங்கள், பிரபந்தங்கள், பாடிய ஆழ்வார்கள், பாடப்பட்ட தெய்வங்கள் என்று இணைத்துப் பார்க்கும் தொடர்பு விட்டுப் போய்விடும்

இங்கே சென்னை நகரம் என்று வந்தால்கூட, கபாலிகோயிலும், புதிதாக வந்திருக்கும் அஷ்ட லட்சுமி கோயிலும் பெறுகிற விளம்பரத்தைப் பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலும், மாதவப் பெருமாள் கோயிலும், கேசவப் பெருமாள் கோயிலும், திருநீர்மலையும், ஸ்ரீ பெரும்பூதூரும் பெறுவதில்லை.

நமது ஸ்ரீவைஷ்ணவ சங்கங்கள் நூற்றெட்டுத் திருப்பதிகளைப் பற்றிப் பிரச்சாரம் செய்யவேண்டும். சுற்றுலா ஏற்பாடு செய்ய வேண்டும் அஷ்டப் பிரபந்தத்திலுள்ள நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியைத் தனியே எடுத்து வெளியிட வேண்டும். குழந்தைகளுக்கு அவற்றைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். சில முக்கிய திவ்யதேசக் கோயில்கள் கவனிப்பாரின்றிப் புல்பூண்டு முளைத்துப் போகிற நிலையில் உள்ளன. அவற்றை ஜீர்ணோத்தாரணம் செய்யக் கமிட்டிகள் அமைக்க வேண்டும். இது ஸ்ரீ வைஷ்ணவர்கள் உடனடியாகக் கவனிக்க வேண்டிய காரியமாக முன் நிற்கிறது.

# அன்புள்ள ஸ்ரீ தாசார்யரே!

**V. R. வாசுதேவன்** **திருவல்லிக்கேணி,**

வேதாந்த தேசிகர் அருளியுள்ள நூல்கள் 108 என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் பெரியோர்கள் 116 என்று கூறுவர். மேலும் வேதாந்த தேசிகர் வடமொழியில் மட்டுமல்லாமல் தமிழ் மொழியிலும் பல நூல்கள் அருளிச் செய்துள்ளார்.

**பாபு.** **சென்னை**

சென்ற மாதமும் நா. பார்த்தசாரதி அவர்கள் எழுதிய கட்டுரை மிகவும் நன்றாக இருந்தது. இத்தனை நாட்கள் இவற்றை எடுத்துச் சொல்பவர் இல்லாதிருந்தது நம் துரதிர்ஷ்டமே. அச்சுப்பிழைகளை கவனித்துத் திருத்தவும்

**ராஜகோபலன்,** **பாம்பே.**

சென்ற இரண்டு மாதங்களாக சாண்டில்யன் கட்டுரைகள் இல்லையே என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களை திகைப்புடன் கூடிய ஆநந்தத்தில் மூழ்கச் செய்து விட்டீர்களே! கவர்ந்த கண்கள் எங்கள் எல்லோரையும் கவரும் என்பது உறுதி.

**ராமநாதன்,** **ஹைதராபாத்.**

P. B. அண்ணங்காராசாரியர் ஸ்வாமி, Dr. V. V. ராமாநுஜம் ஆகியோர் எழுதும் கட்டுரைகள் மணிப்ரவாளம் கலந்திருந்தாலும் ஓரளவுக்குப் புரிகிறது. ஸ்தலசயனத்துறைவார் எளிய தமிழிலேயே எழுதுவதுபற்றி மிகவும் மகிழ்ச்சி, ஆனால் வேளுக்குடி K வரதாசாரியர் கட்டுரை இன்னும் எளிய தமிழில் புரியும்படி இருக்கலாம்.

# ஆஸ்திகரே!

நினைத்தாலே ஆச்சரியமாக இருக்கிறது. ஸ்ரீதாசார்யன் பிறந்து ஒருவருடம் ஆகிவிட்டது. நாட்கள்தாம் எவ்வளவு வேகமாக நகருகின்றன. இந்த ஒரு வருடத்தில் நாம் சாதித்துள்ளவை என்னென்ன என்று ஒரு முறை நினைத்துப் பார்க்கிறோம். பல திவ்யதேசத்து எம்பெருமானின் வண்ணப் படங்கள்; மணிப்ரவாளத்தில் எழுதி வந்த வித்வான்கள் நமக்காக—எல்லோருக்கும் புரியும் வகையில்—எளிய தமிழில் எழுதும் கட்டுரைகள்; எழுத்தாளர் உலகிலே சுடர் விட்டுப் பிரகாசிக்கும் சாண்டில்யன், தீபம் நா. பார்த்தசாரதி போன்றோர் மனமுவந்து நமது சம்ப்ரதாயத்தைப் பற்றி எழுதும் கதை, கட்டுரைகள்; ஸ்ரீ T. A. பாஷ்யம், ஸ்ரீமதி பிரேமா வரதன், ஸ்ரீமதி மோஹனா திருமலை போன்ற புது எழுத்தாளர்கள் அறிமுகம்; நமது சம்பிரதாயத்தில் பிரபலமாக விளங்குபவர்களிடம் பேட்டிகள்; என்றிப்படிப் புதுமைகள் பலவற்றைப் புகுத்திக் கொண்டு ஓராண்டில் படிப்படியாக வளர்ந்திருக்கிறான் ஸ்ரீதாசார்யன்

இந்த வளர்ச்சிக் கெல்லாம் காரணம் உங்கள் ஆசியும் ஆதரவுமே. ஆரம்பித்த முதல் ஆண்டிலேயே உங்களில் 35 பேர்கள் ஆயுள் சந்தா அளித்திருக்கிறீர்கள் என்றால், எந்த அளவுக்கு நீங்கள் ஸ்ரீதாசார்யன் மீது நம்பிகை வைத்திருக்கிறீர்கள் என்பது தெளிவாகிறது அந்த நம்பிக்கையையே ஆதாரமாகக் கொண்டு மேலும் எவ்வளவோ சாதனைகளைச் செய்ய வேண்டுமென்று எல்லாம் வல்ல ஸ்ரீதாசார்யன் அருள் புரிவானாக!

---

Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.



ஞானப்பிரான்